www.padippakam.com



காமராசர்
மாவட்டச்
சிறப்பிதழ்

செப்டம்பர் '90
ரூ 2

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# தாமரை

மலர் : 32 இதழ் : 3
செப்டம்பர் 90

## காமராஜர் மாவட்ட மலர்

நிர்வாக ஆசிரியர் :
ப. ஜீவானந்தம்

ஆசிரியர் :
ப. மாணிக்கம்

பொறுப்பு ஆசிரியர் :
கே. சி. எஸ். அருணாசலம்

படிப்பகம்

www.padippakam.com

# புரட்சியின்... பாரதிதாசன்

புத்துலகச் சாளரத்தை திறந்து வைத்து
பூங்காற்றைத் தமிழ் நெஞ்சில் உலவச்
செய்தான்

இத்தரையில் நடக்கின்ற புதுமை எல்லாம்
ஏற்றிவந்து தமிழ்க்கவியில் இறக்கி வைத்தான்

முத்திரைத்து கரையதனை முத்தம் கொஞ்சும்
முக்கடல்போல் கவிதையடி முழக்கமிட்டான்

சித்திரையில் சுட்டெரிக்கும் வெய்யில் போல
தீமைகளை புழுங்கவைத்த செம்மல் ஆனான்!

★

தவங்கிடந்து வரம்பெற்றுத் துள்ளித் துள்ளித்
தாவிவரும் இனிமைமிகு தமிழின் சொற்கள்,

இவனுடைய எழுதுகோல் மையில் மூழ்கி
என்றென்றும் சிரஞ்சீவி ஆவதற்கு

படிப்பகம்

www.padippakam.com

# விதைகள்

கவிதைகளின் வடிவாகி காட்சி தந்து
கருப்பூரம் சந்தனம்போல் மணம்பரப்பும்.
நவயுகத்தின் வாசலுக்குத் தீபமாகும்
நாட்டவர்தம் மனத்துள்ளே வீரம் ஊட்டும்!

★

பூவேந்தி வந்தஇளவேனில் போல
புதுமைபல் தமழுக்குக் கூட்டி வைத்து
தூவாமல் தூவுகிற மல்லிகை போல்
சொற்பெய்து நம் நெஞ்சை சொக்க
வைத்தான்;

பாவேந்த னாக அவன் மிக்கு யர்ந்தான்
பாரதிக்குத் தாசனெனத் தோள்கள் தட்டி
நாவார அவன்பெருமை போற்றி இந்த
நாட்டிலொரு புரட்சிக்கு விதைகள் இட்டான்.

கே. சி. எஸ். அருணாசலம்

நூற்றாண்டு

படிப்பகம்

www.padippakam.com

# ஆண்டாள் மண்ணில் அலர்ந்த அழகு மலர்

குமரி மாவட்ட மலரையடுத்து காமராஜர் மாவட்ட மலரை மிகுந்த மகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் வெளியிடுகிறோம்.

பெண் குலத்துக்குப் பெருமை சேர்த்து,

கண்ணனின் காதலில் கசிந்துருகிக் கன்னித் தமிழிலக்கியத்தில் ஒரு கமலப் பூவாக மிதக்கும் ஆண்டாள் அவதரித்த மாவட்டம் அது.

தேச விடுதலைப் போரில் முக்கிய பங்கு வகித்த மாவட்டங்களில் இதுவும் ஒன்று.

இந்த மலரை உருவாக்கிய கலைஞர்கள்:

காமராஜர் மாவட்ட கலை இலக்கியப் பெரு மன்றத் தலைவர் நாவலாசிரியர் தனுஷ்கோடி ராமசாமி,

மாவட்டச் செயலாளர், இசைச் செல்வர் செ. ஞானன்,

இராஜபாளையம் பெருமன்றத் தலைவர் குறிஞ்சிச் செல்வர் கொ. மா. கோதண்டம்

மற்றும் மாவட்டப் பெருமன்றத் தோழர்கள் விளம்பரம் நல்கி உதவிய பெருமக்கள்

அனைவருக்கும் தாமரையின் பாராட்டுகள், வாழ்த்துகள்.

—பொறுப்பு ஆசிரியர்

படிப்பகம்

www.padippakam.com

# பாரதியாரின் சங்கற்பங்கள்

இயன்றவரை தமிழே பேசுவேன் தமிழே எழுதுவேன். சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன். எப்பொழுதும் பராசக்தி-முழு உலகின் முதற்பொருள்—அதனையே தியானஞ் செய்து கொண்டிருக்க முயல்வேன். அதனைக் குறித்தே ஓயாமல் எழுதிக் கொண்டிருக்க முயல்வேன்.

பொழுது வீணே கழிய இடங்கொடேன். லௌகிக காரியங்களை ஊக்கத்துடனும் மகிழ்ச்சியுடனும் அவை தோன்றும் பொழுதே பிழையறச் செய்து முடிக்கப் பழகுவேன்.

உடலை நல்ல காற்றாலும் இயன்றவரை சலிப்பதாலும் தூய்மையுறச் செய்வேன்.

மறந்தும் தற்புகழ்ச்சி பாராட்டுதல் விரும்பேன்.

மூடரின் உள்ளத்தில் என்னைப் பற்றிய பொய் மதிப்புண்டாக இடங்கொடேன்.

சர்வ சக்தியுடைய பரம்பொருளை தியானத்தால் என்னுள்ளே புகச் செய்து எனது தொழில்களெல்லாம்தேவர்களின் தொழில்போல் இயலுமாறு சூழ்வேன்.

பொய்மை, இரட்டுற மொழிதல், நயவஞ்சனை, நடிப்பு இவற்றால் பொருளீட்டிப் பிழைத்தல் நாய்ப் பிழைப்பென்று கொள்வேன்.

இடையறாது தொழில் புரிந்து இவ்வுலகப் பெருமைகள் பெற முயல்வேன். இல்லாவிடின் விதிவசமென்று மகிழ்ச்சியோடிருப்பேன்.

எப்போதும் மலர்ந்த முகம், இனிய சொல், தெளிநத சித்தம் இவற்றோடிருப்பேன். ஓம்.

பதின்மூன்றாம் பதிப்பு மார்ச் 1971
அருணா பதிப்பகம்,
127. தெற்காவணி மூல வீதி,
மதுரை-1.
போன் : 26812



படிப்பகம்

www.padippakam.com

# இந்த வேள்வியை பாதுகாத்து வளர்ப்போம்!

நோக்குமிடமெல்லாம் வேலிக் கருவேல மரங்களின்றி வேறில்லை எனக் கிடக்கும் மாவட்டம் எங்கள் காமராஜர். மேற்கில் தொடர் மலைகளையும், கிழக்கில் வங்கக் கடலையும், தெற்கில் நெல்லையையும் வடக்கில் மதுரை, தஞ்சை, திருச்சி மாவட்டங்களையும் தழுவிப் பரந்து கிடந்த எங்கள் முன்னாள் முகவை மாவட்டம், 'ராமநாதபுரம்', 'பசும்பொன் தேவர் திருமகன்' 'காமராஜர்' என மூன்றாகப் பிரிக்கப்பட்டு சிறுத்துப் போயிற்று.

வானம் பார்த்த வாழ்வைக் கொண்டவர்கள் எங்கள் மக்கள். இருப்பினும் கடுமையாகப் போராடி தங்களை நிலை நிறுத்திக் கொள்ளும் தன்மையுடையவர்கள். வளமில்லா நிலைமையையே வளமாகக் கொண்டு எண்ணிலா தொழில்களை வளர்த்துக் கொண்டுள்ளனர்.

குடிசைத் தொழிலாக நிப்பு உற்பத்தி செய்யும் தொழில் முறையைக் கண்டார்கள்.

சுமார் 300 நிப்புக் - கம்பெனிகள் சாத்தூரில் உள்ளது. சாத்தூர் பகுதியில் மட்டும் 2500 தீப்பெட்டி உற்பத்தி செய்யும் சிறு தொழிற் கூடங்கள் உள்ளன. இதைவிடப் பல மடங்கு சிவகாசிப் பகுதியில் உள்ளது.

சிவகாசியை குட்டி ஜப்பான் என்று அழைக்கிறார்கள். 'வேலை காலி இல்லை' என்ற போர்டுகளே தமிழக நகரங்களின் தொழிற் கூடங்கள், உணவு விடுதிகள் முன் தொங்குவது வழக்கம் ஆனால் சிவகாசியில் மட்டுமே தெருவுக்குத்தெரு தொழிற் கூடங்கள் முன்னால் 'வேலைக்கு ஆட்கள் தேவை' என்றபோர்டுகள் தொங்குவதைக் காணலாம். பிச்சைக்காரர்கள் இல்லாத நகரம் நம்நாட்டில் சிவகாசியாக மட்டுமே இருக்கும். வண்ண அச்சுத்துறையிலும், பட்டாசு வெடிகள் தயாரிப்பதிலும் தீப்பெட்டி உற்பத்தியிலும் சிவகாசி முதன்மையாகஉள்ளது.

சாத்தூர் சேவு தமிழகத்தில் பெயர் பெற்றது. காரத்தில் சிறந்தது சாத்தூர் மிளகாய். சாத்தூர் வெள்ளரிப் பிஞ்சு பிரசித்து பெற்றது.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் அவதரித்த ஊர். தமிழகத்தின்



படிப்பகம்

www.padippakam.com

சின்னமாக விளங்கும் கோபுரம் ஸ்ரீ ஆண்டாள் கோயில் கோபுர மாகும். இந்தியாவின் அழகிய பெரிய தேர்களில் ஒன்று ஸ்ரீவில்லி புத்தூர் தேர். இது நெசவாளர் நிறைந்த ஊரும் கூட.

ராஜபாளையம் ஒரு வித்தியாச மான.... இந்தியாவின் தொழிலதி பர்கள், நாகரீகம் உடைய பெரு நகரம். அருப்புக்கோட்டை நில வுடமை சமுதாயத்தின் சின்ன மாக விளங்கும் நகர். உழவும் நெசவும், நவீனத் தொழில் களும் பிணைந்து வளரும் நகர். விருதுநகர் மாவட்டத்தின் தலைநகர். பெரு வணிக நகர்.

தமிழகத்தில் கல்வித்துறையில் மிகச் சிறந்த கல்வி மாவட்டமாக விளங்குவது விருதுநகர் கல்வி மாவட்டமாகும். பத்து, பன்னி ரெண்டாவது வகுப்புக்களுக் குரிய அரசுத் தேர்வுகளில் சுமார் இருபது ஆண்டுகளாக அதிகமான தேர்ச்சி விழுக்காடு பெற்று மாநி லத்தின் முதலாவது இடத்தை தொடர்ந்து பெற்று வருவது விருதுநகர் கல்வி மாவட்டமாகும்

மழை வளத்தாலும், மண் வளத்தாலும் இம் மாவட்டம் பிந்திய நிலையில் இருப்பினும் சிந்தனையாற்றலிலும் செயல் திறத்திலும் மிக்க மனிதர்கள் நிறைந்த மாவட்டமாக இது உள்ளது. அரசியல் விழிப் புணர்ச்சி மிக்கவர்கள் நிறைந்த மாவட்டம் இது. பி.எஸ்.குமார சாமிராஜா, கே.காமராஜ் ஆகிய இரண்டு தமிழக முதல்வர்களை பெற்றெடுத்த மாவட்டம், எஸ். ராமசாமி நாயுடு, ஆர். கிருஷ்ண சாமி நாயுடு போன்ற தேசிய தலைவர்களும், தமிழக விவசாயி கள் சங்கத் தலைவராக இருந்த மகாராஜபுரம் எஸ் அழகர்சாமி இந்திய கம்யூனிஸ்ட்கட்சியின் மாநிலத் துணைச் செயலாளராக உள்ள ஏ. சீனிவாசன் மற்றும் தமிழக அரசியலில் பெரும் பர பரப்பை ஏற்தடுத்திவரும் சாத் தூர் கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன் ஸ்ரீவில்லிபுத்தூர் தாமரைக்கனி, விருதுநகர் பெ. சீனிவாசன் போன்றோர் பிறந்த மண் இது. சென்னை ராஜ்யம் என்ற பெயரை மாற்றி 'தமிழ் நாடு' என பெயர் வைக்கக் கோரி அறுபத்து மூன்று நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் விட்ட சங்கரலிங்கனார் வாழ்ந்த மாவட்டம்.

ஆண்டாள்; வில்லிபுத்தூராழ் வார் போன்ற பெருங் வஞர் களும், இந்தக் காலத்தில் வில் லிசை வேந்தர் பிச்சைக்குட்டி, ஏ.வி.பி ஆசைத்தம்பி போன்ற கலைஞர்களும் வாழ்ந்த மண் ணிது. பல்வேறு நாட்டுப்புறக் கலைகளும், கலைஞர்களும் நிறைந்துள்ள மாவட்டம் காமராஜர். உலகத்திலேயே மிக அதிகமான குழந்தைகள்



படிப்பகம்

www.padippakam.com

தொழிலாளர்களாக நசுங்கி நலிந்து கொண்டிருப்பதும் இந்த மாவட்டத்திலே தான்.

இன்றும் கவிஞர்கள் சிறு கதை எழுத்தாளர்கள், நாவலாசிரியர்கள் என்று மிகப்பெரிய படைப்பாளர் பட்டாள உள்ளது.

இன்று ஜாதிவெறிக் கொலைகளால் தமிகத்தின் ஒட்டு மொத்த கவனத்தையும் சாத்தூரும், ராஜபாளையமும் ஈர்த்துள்ளது. அமைதி தவழ்ந்த இந்த மாவட்டத்தில் அரிவாள், வேல்கம்பு, என்பதைத் தாண்டி எங்கும் வெடிகுண்டுகள் வெடிக்கத் தொடங்கிய வேளையான காலமும் வந்தது. எங்கும் பதட்டம்; வதந்திகள் அச்சம்; வீடுகளைக் காலி செய்து வெளியேறுவோர், வெறிச்சோடி கிடக்கும் வீதிகள்...இந்நிலையில் தாமரையின் காமராஜர் மாவட்ட மலர் தயாரிக்கும் பொறுப்பு எங்களுக்கு வந்தது. மலர் தயாரித்து முடிக்கும் இந்தத் தறுவாயில் எங்கள் மாவட்டத்திற்கு அமைதி மீண்டும் வந்துள்ளது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. பல்வேறு பிரிவு மக்களும் 'இந்தக் கலவரம் யாரோ சில சுயநலமிகள் தொடங்கியது' 'உழைக்கும் மக்களுக்கு எதிரானது' என்பதை உணரத் தொடங்கியுள்ளனர்.

விவேகமும் வீர்யமும் மிக்க இம்மாவட்ட மக்களிடையே தமிழ்நாடு கலை இலக்கியப்பெருமன்றம் கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன் தோன்றி வலிமையாகவும் வளமாகவும் வளர்ந்து வருகிறது.

விருதுநகரில் செ.ஞானன், இரா. விச்சலன் ச. ஞானதேசகன், சி.வீராச்சாமி போன்றோரால் 1974ல் தொடங்கப்பட்டது. இதே காலத்தில் ராஜபாளையத்தில் கொ.மா.கோதண்டம், பூ.சு.துரைராஜ், மு.கு. ஜகந்நாதராஜா, கொ.ச.பலராமன், குன்றக்குடி பெரிய பெருமாளால் சிறப்பாக நடத்தப்பட்டது. இன்று லதா, சிவ. அருணா சங்கர், கொ.மா.கோ. இளங்கோ போன்றோரால் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. சாத்தூரில் ச.லட்சுமணப் பெருமாள், எஸ். பழனிக்குமார் தனுஷ்கோடி ராமசாமி, இரா. அழகர்சாமி போன்றோரால் வளர்க்கப்பட்டது.

ஸ்ரீ வல்லிபுத்தூரில் வீர. வேலுச்சாமி, சு.ப.கோ. நாராயணசாமி, சோளயூர் மணியனால் வளர்க்கப்பட்டது. இன்று எஸ். எஸ். மணியம், சி.விநாயகமூர்த்தி போன்றோரால் நடத்தப்படுகிறது. சிவகாசிக்கு ஞானன் வேலைக்காக மாறி வந்தபொழுது இங்கும் கிளையை ஆரம்பித்தார். இன்று அவ



படிப்பகம்

www.padippakam.com

ரோடு பு.சி.கணேசன், ராமச் சந்திரன், க.சிவபெருமாள், சந்திரன், சேகர் போன்றோரின் தோழமையோடு வளர்த்து வருகிறார்.

1985க்குப் பின்னால் ராஜ பாளையத்தை அடுத்த சத்திரப் பட்டியில் ஏ.எம்.சாமியும், வெள்ளைச்சாமி என்ற கருப்பசாமியும் கிளையைத் தொடங்கி மக்கள் இயக்கமாகவே வளர்த்து வருகிறார்கள். இவர்களோடு கே. சுந்தரராஜ், பழநி பரமகுரு, கே. ராஜகோபால், ஆறுமுகப் பெருமாள் போன்ற பல இளைஞர்கள் உற்சாகமாகச் செயல்பட்டு வருகின்றனர்.

மாவட்ட கிளைகள் தோறும் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. சிவகாசியில் ஞானன் இசைக் குழுவும், ஸ்ரீவில்லிபுத்தூரில் பாலன் இசைக்குழுவும், ராஜபாளையத்தில் தாமரை இசைக்குழுவும் வளர்ந்து வருகிறது. சிவகாசி இசைக்குழு ஒரு கேசட் வெளியிட்டுள்ளது. ராஜ பாளையத்தில் நிஜ நாடகக் குழுவும் உள்ளது. ராஜபாளையம் கிளை ''புதிய புறாக்கள்'' என்ற பல கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு நூலையும் கொ.மா. கோதண்டத்தின் முன் முயற்சியால் வெளியிட்டுள்ளது. மாவட்டக் கிளைகள் ஒவ்வொன்றிலும் பல கவிதை, சிறுகதை, தொகுப்பு நூல்களும், நாவல்களும் வெளியிடப்பட்டுள்ளன. சத்திரப்பட்டி, ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் கிளைகளிலிருந்து பல கையெழுத்து இதழ்கள் நடத்தப்பட்டன. சில தொடர்ந்து வருகிறது. மாவட்டத்தின் பல கிளைகள் ஆரம்ப, உயர், மேனிலைப் பள்ளிகள், கல்லூரி மாணவர்களிடையே பேச்சுப் போட்டி, பாட்டுப் போட்டி, கட்டுரைப் போட்டிகள் நடத்தி வருகின்றன.

---

## இரா. ஆனந்தி

'ஓர் வழியில்லையே அனைவரும் ஒன்றுபட..... என்ற தவிப்புடன், கனவுகளில் கலைந்து, நட்புகளில் கலங்கி நினைவலைகள் தளும்பியபடி நிதான நடையிடும் கவிதைகளால் கனவுகளைப் பரிமாறும் ராஜபாளையத்துக் கவிதைக் குயில் இவர். தாமரை, தீபம், அமுதசுரபி, ஆனந்த விகடன் மற்றும் பல்வேறு இலக்கிய இதழ்களில் கவிதைகளும் கதைகளும் எழுதி வருபவர். 'அறிமுகம்', 'அன்புள்ள உனக்கு', 'இன்னும் கொஞ்ச தூரம்...' இவரது கவிதைத் தொகுதிகள்.

க.இ.பெ.மன்ற உறுப்பினர்.

---



படிப்பகம்

தாமரையின் காமராஜர் மாவட்ட மலருக்காக கவிதைகளும், சிறுகதைகளும், ஆய்வுக் கட்டுரைகளும், சிரிப்புக் கொத்துக்களும், துணுக்குகளும், புகைப் படங்களும் வந்து குவிந்தன. ஒரு இதழுக்கு போதுமானதை மட்டுமே ஏற்க முடிந்தது.

செ.ஞானன், பு.சி.கணேசன், ரா.அழகர்சாமி, கொ.மா. கோதண்டம், எஸ்.எஸ்.மணியம், ஏ.எம்.சாமி இவர்களோடு தனுஷ்கோடி ராமசாமியும் இணைந்து இம்மலரைத் தயாரித்துள்ளனர்.

குமரி முனையில் தொடங்கிய இந்த வேள்வியின் வேகம் கிஞ்சித்தும் குறைந்துவிடாமல் பாதுகாத்து வளர்க்க நாங்கள் எங்களுக்குள்ள எத்தனையோ இடர்ப்பாடுகளுக்கிடையேயும் முழு முயற்சி செய்துள்ளோம். தாமரை வளரவும், வளமடையவும் விளம்பரங்கள், சந்தாக்கள் விற்பனை அதிகரிப்பதும் முக்கியம் என்ற வகையிலும் முயற்சி செய்துள்ளோம். தாமரையின் அழகும், மணமும், மேலும், மேலும் கூட வேண்டும்; அது எட்டும் எல்லைகள் விரிவடைய வேண்டும் என்ற இதயபூர்வமான ஆசைகளோடு நாங்கள் தமிழ் மக்கள் முன் இவ்விதழை மிகுந்த அன்புடனும் தோழமையுடனும் படைத்துள்ளோம்.

---

## வீர. வேலுச்சாமி

கரிசல் இலக்கியத்திற்கு முன்னத்தி ஏர் பிடித்தவர்களில் இவரும் ஒருவர்.

வானம் பார்த்த கரிசல் காட்டு மக்களின் வளமான மனமும் தீராத துயரங்களும் நிரம்பி வழியும் கவிதைகள் இவர் கதைகள்.

நூலாக வெளிவந்துள்ள ஒரே சிறுகதைத் தொகுதி 'நிறங்கள்'. 'தமிழ் நாட்டு சிறுவர் நாடோடிக் கதைகள்' என்ற இவருடைய நூல் தமிழகத்து எழுத்தறிவின்மையை போக்குவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள நூல்களுள் ஒன்றாகும்.

நாட்டுப் புற வியலிலும் புதுக் கவிதைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

---



www.padippakam.com
படிப்பகம்

# புதிய கோள்

www.padippakam.com

—ரா. அழகர்சாமி

இந்த வாள்
வார்க்கப்பட்டது
மீசைக்காரனால்;
சாணைப்பிடிக்கப்பட்டது
தாடிக்காரரால்

ஈரோடும்
எட்டையபுரமும்
இரு முனைகள்.

இது—
சல்லடையாக்கியது
ஜாதிப்பேயை!
சம்காரம் செய்தது
மதத்தின் சூதை!
முண்டமாக்கியது
மூடத்தனத்தை

இவன்—

அன்னைத் தமிழை
அரியணை ஏற்ற
விண்ணின்
இடியைப் பிடித்து
கவிதையின்
இடையில் வைத்தவன்!

காலம் மண்டியிட்டுக்
கவிதையை
அரியாசனம் ஏற்றியது!

பூக்களை வெறுத்து
தேனீக்கள்
புதுவையைச் சுற்றியது!

பல்லவன் உளி
பாடம் கேட்க
பகத்சிங் மீசை
வரிகளாயிற்று!

சொற்கள்
புயலைச் சூல்கொள்ள
கவிதை
காட்டாறாயிற்று!

அழகிடம் கேட்டால்
அரிச்சுவடியை
இவனிடம்
கற்றதாய்க் கூறும்!

மொழியைக் காக்க
முழங்கிய சங்கொலி
தமிழர்
இதயத்தையெல்லாம்
எரிமலை ஆக்கியது!

கரும்பு வரிக்குள்
அரும்பிய தீ
மாந்தர்
நரம்புக்குள் புகுந்து



படிப்பகம்

www.padippakam.com

நர்த்தனம் புரியும்போது
சிற்றம்பலவனும்
சின்னவனாகிப் போவான்!

குறிஞ்சி
மலை முகடுகளில்
மட்டுமே பூப்பதில்லை!
அலைகள் தாலாட்டும்
புதுவையின்
கரைகளிலும் தான்!

கதிரும்
திங்களும்
கலந்ததால் பிறந்த
புதிய கோளே
புரட்சிக் கவி!

---

# கோடுகள் அல்ல பூகோளம்

"நான் கல்லூரியில் படிக்காதவன்; பூகோளம் தெரியாதவன்; என்றெல்லாம் சொல்கிறார்கள். கல்லூரி போனவன் என்றோ, எனக்கு பூகோளம் தெரியும் என்றோ நான் எப்போதும் சொன்னதில்லை. ஆனாலும் எனக்கும் பூகோளம் தெரியும். தமிழ் நாட்டில் உள்ள ஊர்களையெல்லாம் பெரும்பாலும் அறிவேன். அவற்றிற்கு போகிற வழி, இடையில் வரும் ஆறுகள் முக்கிய ஏரிகள், அவற்றின் உபயோகம் பற்றி எனக்குத் தெரியும். மற்றும் எந்தெந்த ஊரில் எப்படி எப்படி ஜனங்களுக்கு ஜீவனம் நடக்கிறது, எந்தத் தொழில் பிரதானமாக இருக்கிறது என்பதையும் நேரில் பார்த்திருக்கிறேன். வட இந்தியாவிலும் பல இடங்களைப் பார்த்து தெரிந்து வைத்திருக்கிறேன். இதெல்லாம் பூகோளம் இல்லை, கோடுகள் இழுத்துப் படம் போட்ட புத்தகம் தான் பூகோளம்.... என்றால், அது எனக்குத் தெரியாததாகவே இருக்கட்டும்."

(காமராஜர் பேசியது—காமராஜர் வாழ்க்கை மலர்)

—பு. சி. கணேசன்

---

படிப்பகம்

www.padippakam.com

# அவசர முதலுதவி

அன்றொரு நாள் தெருவில் நான் நடந்து போய்க்கொண்டிருக்கும் போது, காக்கா வலிப்பு (Epilepsy) ஏற்பட்டு கீழே விழுந்து வலிப்புடன் துடிதுடித்துக் கொண்டிருந்தார். அருகில் இருந்த ஒருவர், ஒரு சாவிக் கொத்தை அவர் கையில் கொடுத்தார். அதனால் எந்தப் பலனும் இல்லை. இது ஒரு தவறான மூட நம்பிக்கை. இந்தச் சமயத்தில் உடனடியாகச் செய்ய வேண்டுவது என்னவென்றால், வலிப்புடன் இருக்கும் அவர் தனது நாக்கை கடித்துவிடாமல் இருக்க, இரண்டு தாடைகளுக்கும் இடையே துணியால் சுற்றப்பட்ட ஒரு குச்சியையோ, பென்சிலையோ செருகிவிட்டால், அவரால் தனது நாக்கைக் கடிக்க முடியாது. ஆகவே அவசரக் கேசுகளுக்கு எவ்விதம் முதலுதவி அளிக்க வேண்டும் எனத் தெரிந்து கொள்ளுவது நல்லது.

∴ ∴ ∴

திடீரென்று ஒருவர் அடிபட்டுவிட்டாலோ, நோய்வாய்ப்பட்டாலோ, உடனடி முதலுதவி அளிப்பது பற்றி அனைவரும் தெரிந்திருக்க வேண்டும். ஏனெனில் இது வாழ்வா, சாவா என்ற பிரச்சினை ஆகும். இந்த நேரத்தில் நீங்கள் உதவி அளிப்பது அல்லது அளிக்காமல் இருப்

—டாக்டர் அ. கதிரேசன்



படிப்பகம்

பது, அவனது வாழ்விலோ அல்லது மரணத்திலோ முடியும்.

உடனடியாகச் செயல்பட வேண்டுமே தவிர அவசரப்படக் கூடாது. அடிப்பட்ட அல்லது காயம்பட்ட நபரை உச்சி முதல் உள்ளங்கால் வரை பாருங்கள். மூச்சு விடுதலில் சிரமம் இருக்கிறதா, இரத்தப் பெருக்கு இருக்கிறதா, எலும்புகள் முறிவு ஏற்பட்டுள்ளதா என்பதைப் பார்க்க வேண்டும். டாக்டரிடம் நோயாளியை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும். மூச்சு விடுவது நின்றுவிட்டால் நாமே, நமதுவாயை அவனது வாயுடன் பொருத்தி பலமாக மூச்சுவிட்டு, அவனை மூச்சு விடச் செய்ய முடியும். இது மிகவும் எளிய முறை.

இரத்த ஒழுக்கு ஏற்படும் இடத்தின் மீது நமது உள்ளங்கையை பலமாக அழுத்தி வைத்து இருந்தால், சாதாரண இரத்தப் பெருக்கு நின்று விடும்.

இரத்தப் பெருக்கு ஏற்படும் இடத்திற்கு மேல், ஒரு கயிறு கொண்டு இறுக்கமாக்கி சில நிமிடங்கள் கழித்து அவிழ்த்துவிட வேண்டும். இரத்தப் பெருக்கு அதிகமாகிவிட்டால் மருத்துவ மனையில் சேர்த்துவிட வேண்டும்.

அதிர்ச்சி (Shock) ஏற்பட்டு உள்ளதா என்பதை அறிய சில அறிகுறிகள் உள்ளன. முகம் வெளிறி இருக்கும்; தோல் குளிர்ந்தும், ஈரமாகவும் இருக்கும். மணிக்கட்டில் உணரப்

---

## ரா. அழகர்சாமி

சாத்தூர் கல்லூரியில் பணி புரிந்து வரும் அழகர்சாமி கவிதை, சிறுகதை பரப்புகளில் படைப்பாக்கங்களைச் செய்து வருபவர். 'அலையும் நுரையும்', 'ஒரு தரிசனத்தின் போது' ஆகியன இவரது கவிதைத் தொகுதிகள், 'உதடுகள்' இவரது சிறு கதைத் தொகுதி. கரிசல் காட்டுச்சம்சாரியின் ஏக்கமும், வாழ்வியல் அவலமும், போலி அரசியலும் இவரது படைப்புகளின் கருக்களாக உள்ளன. த க இ பெருமன்றத்தின் சிறந்தபடைப்புகளுக்கான போட்டியில் கவிதைக்கான முதல் பரிசை இவரது 'ஒரு தரிசனத்தின் போது' '89 ஆம் ஆண்டில் பெற்றுள்ளது. திறன் மிக்க பேச்சாளரும் இளைய சமுதாயத்தை எழுச்சி கொள்ளச் செய்யும் கவிஞருமான இவர் த க இ பெருமன்றத்தின் சாத்தூர் கிளையின் செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

படும் நாடித் துடிப்பு மிகவும் பல வீனமாக இருக்கும். (நாம், நமது மணிக்கட்டில் கட்டை விரலுக்குக் கீழாகத் தொட்டுப் பார்த்தால் நாடித் துடிப்பைத் தெரிந்து கொள்ளலாம்) இத் தகைய நோயாளிக்கு உடனடியாக கம்பளிப் போர்வைகளால் போர்த்த வேண்டும். படுக்க வைக்க வேண்டும். வாந்தியில்லாமல், விழுங்க முடியுமானால் சூடான பானங்கள் (காபி, டீ) அளிக்கலாம். உப்பும் சர்க்கரையும் கலந்த எலுமிச்சை சாற்றை அளிக்கலாம்.

விஷம் ஏதாவது அருந்தியிருப்பதாகத் தெரிந்தால் டாக்டர் தான் உதவி அளிக்க வேண்டும். ஏனெனில் நம்மால் என்ன விஷம் என்று கண்டுபிடிக்க முடியாது. அதற்கு மாற்று மருந்து என்ன என்பதும் தெரியாது. ஆகவே மருத்துவமனைக்கு அனுப்பிவிடுவது நல்லதுஏதாவது உதவி செய்ய வேண்டும் எனத் தோன்றினால் ஒரு முட்டையை உடைத்து, பாலிலோ, தண்ணீரிலோ கலந்து கொடுத்தால், ஓரளவு நஞ்சு நீர்த்துவிடும்.

காயம்பட்ட, அடிபட்ட நபரை கவனத்துடன் நகர்த்த வேண்டும். ஏனெனில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தால், அது மோசமாகி விடலாம். உடனடியாக மருத்துவமனையில் சேர்ப்பது நல்லது.

தீப்பட்டகாயமாக இருந்தால், குளிர்ந்த தண்ணீரை அதன்மேல் விடுவது இதமளிக்கும். நெருப்பால் பாதிக்கப்பட்ட பரப்பைப் பொறுத்து அறிகுறிகள் இருக்கும். சுத்தமான துணி கொண்டு மூடியும் வைக்கலாம்.

வயிற்று வலி ஏற்பட்டால், குடல்வால் எனப்படும் அப்பெண்டிக்ஸ் [Appendix] அழற்சியாக இருக்கலாம். இந்த வலி, முதலில் கீழ் வயிற்றில் வலது பக்கத்தில் தோன்றி, சிறிது நேரத்தில் தொப்பூள்பக்கம் வலி இருக்கும். குறைந்த அளவில் காய்ச்சலும், வாந்தியும் இருக்கலாம். டாக்டரை அணுகுவது நல்லது. கர்ப்பப் பெண்ணாக இருந்தால் கருச்சிதைவின் துவக்கமாக இருக்கலாம். இரைப்பைப்புண், (Pcptic Ulcer) வலி நாட்பட்டதாக இருக்கும். இது, திடீரென்று அதிகரித்தால், புண் உடைந்து விட்டது (Perforation) எனப்பொருள். அறுவை சிகிச்சைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேற்கூறிய நோய் நிலைகளில், எந்தவிதமான மருந்தோ பானமோ வாய் வழியாகக் கொடுக்கக் கூடாது. சிராய்ப்பு ஏற்பட்ட புண்களுக்கு தண்ணீரில் நனைத்த துணியையோ, ஐஸ்கட்டியை வைத்துக் கட்டுப் போடலாம். தீப்பட்ட கொப்பு



படிப்பகம்

www.padippakam.com

ளங்கள் இருந்தால் குளிர்ந்த தண்ணீரை ஊற்றி, சோப்பால் கழுவவும். தினமும் இவ்விதம் செய்தால் சீரடைந்து உலர்ந்துவிடும்.

வலிப்புகள் ஏற்படும் போது தோல் குளிர்ந்துவிடும்; சிரம மூச்சு ஏற்படும். தசைகளின் துடிப்பு ஏற்படும். கண்கள் மேலே செருகிவிடும். உடல் இறுக்கமாகக் காணப்படும். பற்களை நற நறவென்று கடிப்பர். டாக்டரை அணுகுவது நல்லது. நாய்க்கடிக்கு உள்ளானால், கடிபட்ட இடத்தை கீறிவிட்டு, நன்கு இரத்தம் வெளிப்படுவது நல்லது. கடிபட்ட இடத்தை சோப்பும் தண்ணீரும் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். கடித்த நாயை, முடிந்தால் கட்டிப் போட்டு 10 நாட்கள் கண்காணிக்கவும். 10 நாட்களுக்குள் நாய் இறந்துவிட்டால், அதை வெறி நாய் எனத் தீர்மானித்து, வெறிநாய்க்கடி எதிர்ப்பு ஊசி மருந்தை மருத்துவமனையில் பெற்று சிகிச்சை பெறவும்.

மின் அதிர்ச்சி ஏற்பட்டால், உடனடியாக பிரதான சுவிட்சை தணித்துவிட வேண்டும் இதற்குப் பின்னர்தான் பாதிக்கப்பட்டவரை தொடவேண்டும். பிரதான சுவிட்சு எங்கே இருக்கிறது எனத் தெரியாவிடில் ஒரு கம்பு கொண்டு, அந்த நபரை அகற்றிவிட்வேண்டும். யாருக்காவது திடீரென்று நினைவிழப்பு ஏற்பட்டால், வெளிறிய தோற்றத்தில், குளிர்ந்த தோலுடன் இருப்பர். கிறுகிறுப்பு, சிரம மூச்சு, இருக்கலாம். முதலுதவியாக கால்கள் மேலாகவும், தலைகீழாகவும் இருக்கும் நிலையில் அவரைப் படுக்க வைக்க வேண்டும். இதன் மூலம் மூளைக்கு இரத்த ஓட்டம் அதிகரித்து நிலை சீரடையலாம். உடைகளைத் தளர்த்தி விடவும் அம்மோனியா உப்பையோ, திரவத்தையோ மூக்கில் தடவலாம். நினைவு வந்தவுடன் காபி போன்ற பானங்கள் அளித்து நல்ல காற்றோட்டத்தில் வைக்கவும். எனினும் நினைவிழப்புக்கான காரணத்தைக் கண்டு பிடிக்க வேண்டும்.

காய்ச்சல் அதிகமாக இருந்தால், துணியையோ, பஞ்சையோ குளிர்ந்த தண்ணீரில் நனைத்து நெற்றியில் இடவும். ஆஸ்பிரின் போன்ற (பாராசிடமால்) மருந்துகளைக் கொடுக்கலாம். குடிக்க நிறைய தண்ணீரோ இனிப்பு பானங்களோ கொடுக்கலாம்.

குளிர் தாக்கம் (Frostbite) ஏற்பட்டால் தோலின் நிறம்



படிப்பகம்

www.padippakam.com

மாறிவிடும். கொப்புளங்கள் தோன்றலாம். உடலின் பாதிக்கப்பட்ட பகுதி குளிர்ந்து, மந்தமான வலி உண்டாகும். முதலுதவியாக பாதிக்கப்பட்ட பகுதியைத் தேய்க்கக் கூடாது. கம்பளித் துணி கொண்டு போர்த்த வேண்டும். 90⁰—100⁰ பாரன் ஹீட் வெப்பத் தண்ணீரில் கால்களை மூழ்க வைக்கவும். சூடானபானங்கள் அளிக்கவும்.

வெப்பத் தாக்கம் (Heat strike) ஏற்பட்டால், குளிர்ந்த தண்ணீரில் நனைத்த துணியால் மூடவும். மின் விசிறியை வேகமாக சுழலவிடவும். குளிர்பதன அறையில் அவரை வைப்பது மிகவும் நல்லது. உப்புத் தண்ணீர் ½ தேக்கரண்டியை ½ கோப்பையில் இட்டு 15 நிமிடங்களுக்கு ஒரு தடவை கொடுக்கவும். மூக்கிலிருந்து இரத்த ஒழுக்கு ஏற்பட்டால் தலையை முன் னோக்கித் தாழ்த்தவும். இரத்த உறை கட்டிகள் இருந்தால் மூக்கைச் சிந்திவிட்டு பஞ்சுகொண்டு மூக்கின் துவாரங்களை

## தனுஷ்கோடி ராமசாமி

தமிழ்ச் சிறுகதைத் துறைக்கு இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. வாழ்வின் மூர்க்கத்தனமான துரத்தலில் மனித உறவுகள் திசைகள் அழிந்து தேம்பும் சூழலை நுட்பமாகச் சித்தரித்து அதன் மூலம் மனித நேயத்தை அழுத்தமாகப் பதிக்கும் ஆற்றல் மிக்கவை இவரது எழுத்துக்கள். இவர் 1978-ல் ‘நாரணம்மா’ 1987ல் சேதாரம் சிறுகதைத் தொகுப்புகளை தமிழுக்கு வழங்கியுள்ளார். 1986ல் வெளியான இவரது இவரது ‘தோழர்’ நாவல் தமிழில் வெளிவந்துள்ள மிக வித்தியாசமான முற்போக்கு நாவலாகும். 1988ல் மனத்தின் அலைக்கழிப்பு, காதலின் மென்மை, இவற்றின் எழுத்தோவியம் இவரது ‘நிழலும் ஒரு கவிதையும்’ குறுநாவல் தொகுப்பு வெளியானது. அழகிய கவிதைகளும் எழுதியுள்ளார். தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் மாநிலச் செயலாளர்களுள் ஒருவராகப் பணிபுரிந்து வருகிற இவருடைய ‘நிழல்’ என்ற குறுநாவல் கன்னட மொழியிலும் ‘தோழர்’ நாவல் மலையாள மொழியிலும் பெயர்க்கப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

அடைத்து, விரல்களால் மூக்கை இறுக்கிப்பிடிக்கவும். முடிந்தால் அட்ரினலின் திரவத்தில் தோய்த்த பஞ்சை மூக்கினுள்ளே வைக்கவும்.

அயற்பொருளைக் குழந்தை விழுங்கிவிட்டால், குழந்தையை தலை கீழாகத் தொங்கவிட்டு அடி வயிற்றில் பலமாகக் கை கொண்டு அழுக்கினால் அல்லது ஓங்கி அறைந்தால், அயற் பொருள் வெளி வந்துவிடும். மூச்சு மண்டலத்தினுள் அயற் பொருள் நுழைந்துவிட்டால் இருமலும், நெஞ்சு அடைப்பும் ஏற்படலாம். முகம் நீல நிறமடையலாம். அகற்ற டாக்டரின் உதவி தேவைப்படும்.

தேள், பாம்புக்கடி ஏற்பட்டால்; கடிபட்ட இடத்தைக் கீறிவிட்டு இரத்தம் ஒழுகச் செய்யலாம். இதன் விஷங்கள் சில சமயம் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கலாம். ஆகவே உடனடியாக மருந்துவமனைக்கு அனுப்புவது நல்லது. பல்வலி தலைவலி போனறவைகளுக்கு குளிர்ந்த ஒத்தடம் கொடுக்கலாம். கட்டாயமாக டாக்டரை அணுகுவது நல்லது.

---

## பட்டுக்கோட்டையார் தலைமை தாங்கிய நாடகம்

1952ல் சத்திரப்பட்டியில் இளங்கோ நாடக கலா மன்றம் தோன்றியது. 1953ல் முதல் படைப்பாக மு. கருணாநிதியின் 'தூக்குமேடை' நாடகத்தை அரங்கேற்றினர். பின் எஸ்.எம். சிவராமனின் 'தியாகி', ச. மாதவனின் 'அமர வாழ்வு' 'சமுதாய விரோதி', கே.சுந்தரராஜின் 'மறுமணம்', 'இன்பவாழ்வு' நாடகங்களை அரங்கேற்றினர். 1956ல் மலையாள எழுத்தாளர் தோப்பில் பாஸின் 'நீங்கள் என்னை கம்யூனிஸ்ட் ஆக்கினீர்கள்' கதையை தமிழ் நாடகமாக்கி அரங்கேற்றினர். இந்த நாடகத்தை 12-9-58ல் நாச்சியார்பட்டி விவசாயிகள் மாநாட்டில் மணலி கந்தசாமி தலைமையிலும், 24-4-59ல் பரமக்குடியில் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் தலைமையிலும், 22-10-62ல் ராநாதபுரத்தில், திரைப்பட வசனகர்த்தாமுகவை ராஜமாணிக்கம் தலைமையிலும் அரங்கேற்றினர். '966 வரை இருபதுக்கும் மேற்பட்ட நாடகங்களை மேடை ஏற்றி இம்மன்றம் செயலிழந்தது. இம்மன்றத்தினர் இப்பொழுது சத்திரப்பட்டியில் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் தோன்றியுள்ளதை வாழ்த்தி ஆலோசகர்களாக இணைந்துள்ளனர்.

கே. சுந்தர்ராஜ்

படிப்பகம்

www.padippakam.com

# உயிர்த்தெழு !

—இரா. ஆனந்தி

பிரிவுதான்
பிரவகிக்கும் கவிதைகள் என்றால்....
பிரிந்து செல் !

★ பரிவுதான்
முகிழ்விக்கும் கவிதைகள் என்றால்....
பக்கம் நில்!

★ மௌனம் தான்
மலர்விக்கும் என்றால்....
காத்திடு!

★ பேச்சுதான்
பலப்படுத்தும் எனின்
பேசு.... ஓயாது!

★ விழிவழித் தூது
வெற்றி சேர்க்கும் எனின்....
இமையாது காண் !

★ அன்புதான்
மகிழ்விக்கும் எனின்....
துணை செய்!

★ நட்பு ஒன்றே
நயப்படுத்தும் எனின்
வளம் கூட்டு !

★ இங்கு—
புரிதல் இல்லை எனின்....
புதைந்து விடாதே....
உயிர்த் தெழு !



படிப்பகம்

www.padippakam.com

# வணக்கத்திற்குரிய வீரக்கல்

வடக்கிலிருந்து சாத்தூருக்குள் நுழையும் போது சாலை இரண்டாகப் பிரிகிறது. ஒன்று சாத்தூருக்குள் செல்வது, மேற்கே செல்லும் மற்றது பை பாஸ் ரோடு. இவ்விரு சாலைகளுக்கும் இடையில் உள்ளது ஒரு பூங்கா. பூங்காவின் கிழக்குப் பகுதியில் வளவளப்பான கருப்பு நிறத்தில் கம்பீரமாக நின்றுவரவேற்கிறது அந்த வீரக்கல்.

1972 ஜூலை ஐந்தாம் நாள், தமிழ் நாட்டின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க நாள். 'பம்பு செட் கரண்ட் சார்ஜை குறைக்க வேண்டும்' 'விளை பொருளுக்கு ஏற்ற விலை வேண்டும்' என்ற கோரிக்கைகளுக்காக தமிழகம் முழுவதும் போல சாத்தூர்ப் பகுதி விவசாயிகளும் போராடினர். அன்று முழு பந்த்.

பல்லாயிரக்கணக்கில் தங்கள் நியாயங்களுக்காக கொடியேந்தி ஆர்ப்பாட்டம் செய்ய அணி வகுத்து வந்த விவசாயிகள் அந்த இடத்தில் தடுத்து நிறுத்தப்பட்டனர். ஊர்வலம் முன்னேற முற்பட்டபோது கண்ணீர்ப் புகைக் குண்டுகளை போலீசார் சுட்டனர்.

'வெற்றிலையூரணி' என்ற சாத்தூருக்கு பக்கத்திலுள்ள கிராமத்தைச் சேர்ந்த சீனிவாசன் என்ற இருபது வயது வாலிபன் தன் தலையில் முண்டாசாக கட்டியிருந்த சிவப்புத் துண்டை எடுத்து மடித்து விழுகின்ற கண்ணீர் புகைக் குண்டுகள் புகைக்கி அனைவரின் கண்களையும் கலங்கச் செய்யும் முன் ஓடிஓடி துண்டால் பொத்தி அவித்துக் கொண்டிருந்தான்.

'ஏய் சிவப்புச் சட்டை ஓடிப்போ' என்று போலீஸ் எச்சரித்தது. பின்னும் ஓடி ஓடி க்கண்ணீர் புகைக் குண்டுகளை அவித்து அணி மேலே முன்னேறச் செய்தான். 'சிவப்புச் சட்டை ஓடறயா சுட்டுத் தள்ளவா?' என்ற எச்சரிக்கையை துச்சமாக்கி முன்னேறினான்.

'சமூர்' அரசின் துப்பாக்கிச் சனியனின் குண்டு தோழர். வெற்றிலையூரணி சீனிவாசனின் மார்பைப் பிளந்தது. செங்குருதி விண்ணை நோக்கிச் சீறிப் பாய இளம் தோழன் மண்ணில் வீழ்ந்தான் 'கொடிகாத்த குமரன்' என்று போற்றப்படும் திருப்பூர் குமரனுக்கு.... வெற்றிலையூரணி சீனிவாசன் சளைத்தவனா? அவன் வீழ்ந்து மடிந்த இடத்தில் அந்த வீரக்கல் நிற்கிறது.

—தனுஷ்கோடி ராமசாமி



படிப்பகம்

www.padippakam.com

# அதிர்ஷ்டம் அழைக்கிறது..!

முத்துபாரதி

இன்னும் சில நிமிடங்களில் தெரு விளக்குகள் மலர்ந்துவிடும். ஒரு லாரியோ வேறு சரக்கு வாகனங்களோ, வரவில்லையாதலால் பீடி வாங்கக்கூட கையில் சில்லரை இல்லை என்ற வருத்தம் மேலோங்க, 'எல்லாம் அவன் செயல்' என்று முணங்கி தோளில் கிடந்த துண்டால் முகத்தை அழுந்த துடைத்துக் கொண்டான், அந்த கமை தூக்கும் தொழிலாளி.

அருகிலுள்ள சைக்கிள் கடைக்காரனிடம் 'ஓசிப் பீடி' ஒன்றை வாங்கி பற்றவைத்துக் கொண்டு எதிரிலுள்ள லாட்டரி டிக்கட் கடையை வெறித்துப் பார்த்தான். சினிமா நடிகை ஸ்ரீதேவி சிரித்த முகத்தோடு கத்தை, கத்தையாக பணத்தை தட்டில் ஏந்தி நிற்கும் 'விளம்பரப் பலகை' இன்று இவனுக்கு வித்தியாசமாக தோன்றியது.

இன்றைய குலுக்கல் குபேர் லாட்டரி, பூட்டான் லட்சுமி, அதிர்ஷ்ட லட்சுமி'' என்ற லட்சுமி மாதாக்களின் பெயர்களின் அறிவிப்பால் மோகம் கொண்ட மனம் எப்படியும் டிக்கட் வாங்க வேண்டுமென சண்டித்தனம் செய்தது.

ஒருநாள்கூட டிக்கட் வாங்காமல் வீடு திரும்பியதில்லை வருமானத்தை பொறுத்து அடுத்த நாள், குலுக்கலில் மாநிலம் வாரியாக வரிசைக்கு ஒன்றாக டிக்கட் வாங்கும் இவன் ஒரு 'தேசியவாதி'.

இதுவரை பத்தும், இருபதுமாக இரண்டு, மூன்று தடவைகளும், அதிகபட்ச தொகையாக ஐம்பது ரூபாயும் கிடைத்திருக்கிறது. நேற்று பூட்டான் லட்சுமியில் ஆயிரத்துக்கு ஒரு நம்பர் இல்லை' என்று ரிசல்ட்டை மட்டும் சொல்லாமல் ''அண்ணே ஓங்களுக்கு யோகம் நெருங்கிருச்சு, பெரிசா ஏதோ வழப் போகுது'' என்ற லாட்டரி கடைக்காரனின் வார்த்தைகள்



படிப்பகம்

www.padippakam.com

அலை அலையாய் மாறி, மாறி நெஞ்சில் அடித்தது.

இன்று டிக்கட் வாங்காமல் விட்டு விட்டால் எங்கே அதிர்ஷ்டம் தன்னை விட்டு போய் விடுமோ?...என்ற பயம் கலந்த ஏக்கத்தால் பெருமூச்சு விட்டான். கடன் வாங்கியாவது ஒரே ஒரு டிக்கட் வாங்கி விடுவது என்ற முயற்சியும் தோல்வியான வுடன் வீட்டை நோக்கிப் புறப் பட்டான்.

இந்த வாரத்திலேயே எதிர் பாராத வரவு ஒன்று வர இருக் கிறது என்ற கிளி ஜோஸ்யக் காரன் வாக்கு பொய்த்துவிடுமா, என்ன? சித்தாள் வேலைக்குப் போன மனைவி இன்னும் வீடு திரும்பவில்லை. மங்கிய மண் ணெண்ணை விளக்கின் ஒளியில் பாடம் படித்துக் கொண்டிருந்த மகன் இவனைக் கண்டதும்

''அப்பா நோட்டு, புஸ்தகம் வாங்கி கொடு. டீச்சர் அடிக் கிறாங்க'' என்றுசிணுங்கினான்.

''ஏலே போடா, நீ என் னத்தப் படிச்சு கிழிக்கப் போற... போயி செம்புல கொஞ்சம் தண்ணீ கொண்டா'' என்று கூறி திண்ணையில் அமர்ந்து மோட்டைப் பார்த்துக் கொண் டிருந்தான்.

சிறுவன் பித்தளைக் குடத்தில் தண்ணீர் மொண்டு வெளியே எடுக்கும்போது குடத்தின் கழுத் துப் பகுதியில் 'ட்டைங்' என்ற ஓசையுடன் செம்பு வெளியே வந்தது. இந்த ஓசை இவன் இதயத்தை குதுகுலிக்க வைத் தது. ஐடியா பளிச்சிட்டது ..! பித்தளைக் குடம் பழசுதான் என் றாலும் பணம் தருமே! நேரே வீட்டிற்குள் சென்று தண்ணீரை சிமிண்ட் தொட்டியில் மடமட வென ஊற்றிவிட்டு குடத்துடன் நடந்தான்.

மகன் மூலம் விசயத்தை யூகித்த மனைவி வேலை பார்த்துவிட்டு அப்போதுதான் வந்த களைப்பையும் மீறி செம் பட்டை முடி காற்றிலாட, கண வன் செய்கையை தடுத்துவிட முடியும் என்ற நம்பிக்கையில் ஓடினாள்.

ஆனால் எதிரே கையில் லாட்டரி கட்டோடு ''நாளைக்கு நான் லட்சாதிபதி நாளைக்கு நா...''என்று பிதற்றினான் குடி வெறியில்.

''அடப் பாவி மனுஷா இது ஒன்னுதான் இருந்திச்சு, இதை யும் வித்து வாக்கரிசி போட்டிட் டயா..?'' என தனது இயலா மையை ரோடு என்றும் பார்க் காமல் நெஞ்சிலும், தலையிலும் அடித்துக் கொண்டு பதறினாள்.

''ஏய் ஒண்ணும் பேசாதடி, நாளைக்கு (நா)ன் ல்ட்சாதிபதி உனக்கு பத்து கு(ட)ளம் வாங்கி



படிப்பகம்

www.padippakam.com

தா...றேன்'' என தள்ளாடினான்.

காலை எழுந்தவுடன் சாமி படத்திற்கு முன்னால் இருந்த லாட்டரிக் கட்டை கண்ணில் ஒற்றி எடுத்துக்கொண்டு ரிசல்ட் பார்க்க கடைக்குப் போனான். ஒரு பரிசுகூட இல்லை என்று கடைக்காரன் சொன்னபோது இவனுக்கு ஆத்திரமும், கோபமும் வந்து துடித்தான். தொண்டையில் சிக்கிக் கொண்ட முள்ளை எடுக்க முடியாத பிராணவஸ்தையால்விக்கினான்.

இன்னும் விளம்பர போர்டில் சினிமா நடிகை ஏந்திய தட்டுடன் சிரித்துக் கொண்டிருந்தாள்.

சுபலட்சுமி இன்று குலுக்கல், ஒரே ரூபாயில் நீங்கள் லச்சாதிபதியாகப் போகிறீர்கள்...! அதிர்ஷ்டம் உங்களை அழைக்கிறது....! என்ற ஒலிபெருக்கியின் வர்ணனை தொடர்கிறது...

இவன் தலையை கவிழ்ந்து கொண்டு தள்ளாடி நடந்தான்...

●

மனித நேயப் பத்ரகையை
இதய சுத்தியோடு உயர்த்திப்
பிடிக்கும் கரங்களால்
உருவாகும்

தாமரையின் காமராஜர் மாவட்ட மலருக்கு
எங்கள் வாழ்த்துக்கள்

**ஸ்ரீவிநாயகா பிரிண்டர்ஸ்**

சுப்பரமணியசாமி கோயில்
வடக்கு மாட வீதி
சாத்தூர்.



படிப்பகம்

www.padippakam.com

# தமிழில் விமரிசனம்

பு. சி. கணேசன்

தமிழ் நாட்டில் விமரிசனத் துறையின் வளர்ச்சி பற்றி ஆராய்ந்தால் அந்தக் கணக்கீட்டில் ஓரளவு பல்கலைக் கழகப் பேராசியர்களும், சிறு பத்திரிகையாளர்களுமே அடங்குவர். கலை இலக்கியங்களை நுகர்கின்ற வெகுஜனங்களை மேற் சொன்ன இருவரின் விமர்சனங்கள் சென்று எட்டுவதில்லை. வெகுஜனக் கலை விரும்பிகளும் விமரிசனங்கள் குறித்துஅக்கறைப்படுவதில்லை. கல்வித் துறை சார்ந்து தமிழைப் படிப்பவர்களுக்கு விமரிசனம் பற்றிய பாடம் போதிக்கப்படவில்லை. தேர்ந்து கவிதை வரிகளைப் பாராட்டுதல், பொருள் சொல்லுதல், மனனம் செய்தல் என்ற அளவில் தமிழ் போதிக்கப்படுகிறது. உரைநடை சார்ந்த இலக்கியங்கள் குறித்தும் பெரும்பான்மையானபேராசிரியர்களும் தமிழாசிரியர்களும் அக்கறைப்படுவதில்லை. வாழ்கின்ற காலத்து இலக்கியம் தமிழ்க்கல்வி முறையில் பெரும்பங்கு வகிக்கவில்லை. அதைப்பற்றியஅழுத்தமான சிந்தனையோ, சிந்தனையைப் பெறும் முயற்சியோ இல்லை என்பது கவலைக்குரியது.

அறுபதுகளில் பேராசிரியர் நா.வா விமரிசனம் பற்றிய ஆழ்ந்த உணர்வை இயக்க ரீதியாக ஏற்படுத்த முயன்றார் அதில் வெற்றியும் பெற்றார். எழுபதுகளில் யாழ்பல் கலையில் பேராசிரியர் கைலாசபதி விமரிசனத்தைப் பாடமாக்கி மாணவர்களுக்குப் போதித்தார். விமரிசனம் பற்றி பல நூல்களைத் தாமே எழுதியதோடு தம்மைச் சுற்றியிருந்தவர்களையும் எழுதும்படித் தூண்டினார். படைப்பு கர்த்தாக்கள் பலருக்கு அவரது விமரிசனம் மிகப் பயனுடையதாக அமைந்தது நிதர்சன உண்மை. இலங்கைத் தமிழ் விமரிசகர்களும், படைப்பாளர்களும் பல்கலைப் படிப்பாளர்களும் கைலாசபதியால் புதிய கதியை அடைந்தனர் எனலாம். தளைய சிங்கம் போன்ற முற்போக்கு எதிர்ப்பாளர்கள் கூடக் கைலாசபதியின் எழுத்துக்களைக் குறிப்பிடத்தகுந்ததாகக் கருதினர்.

தமிழ்நாட்டில் இலக்கிய பத்திரி



படிப்பகம்

www.padippakam.com

கைகளின் எண்ணிக்கையும் குறைந்து கொண்டே வருகிறது. விமர்சன ஆர்வம் மிக்கவர்கள், தரமான இலக்கிய நுகர்விகள் படைப்பவரிலும் படிப்பவரிலும் குறைந்துவருவதற்கு இதுஓர்அறி குறி. இலக்கிய அந்தஸ்தில்லாத படைப்புகள் வெகுஜனங்களின் சராசரிக்கும் கீழான ரசனைக்கு ஆளாவது இயற்கை. வாழ்க் கையின் அவலங்களும், அந் நியமாதல் போன்ற சிந்தனை களும் தரமில்லாத இலக்கியங் களைப் படிப்பவரை பாதித்து வருகிறது. விமரிசனத்துறை நிலைபெற்ற தன்மையோடு விளங்கினால் மலிவு இலக்கியங் களும், வாசகர்களும் பெருகுவது தன்னாற் போல் குறைந்து விடும்.

நல்ல தரமிக்க படைப்பு களுக்குச் சிபாரிசு செய்ய வேண் டிய நிலையும் விமரிசனத்துக்கு ஏற்படுகிறது. I S I முத்திரை பெற்ற பொருட்கள் சந்தைக்கு வரும்போது பெறுகின்ற மதிப்பை போல, விமரிசனத்துறைக்கு ஆட்பட்டு ஏற்றுக் கொள்ளப் படும் படைப்பு தரப்படுத்தப் படுகிறது எனலாம்.

இன்றைய பத்திரிகைகளில் தாமரை, செம்மலர், ஆராய்ச்சி, கணையாழி, கனவு மேலும் கல்குதிரை, காலச்சுவடு போன்ற பத்திரிக்கைகள் விமரி சனத்தைக் கலை ரீதியிலும் சமுதாய யதார்த்தவியல் ரீதி யிலும் மேற்கொண்டுள்ளன.

விமரிசனம் படைப்பாளனை வாசகனை எதிர்காலப் படைப் பாக்கங்களைக் கூர்மைபடுத்தும் சாணைக்கல் இக் கூர்மை ஆக்க பூர்வமான நிலையில் செயல் பட்டு, அறிவார்த்தமான முன் னேற்றத்தை வழங்கினால் மொழியும், இலக்கியமும் செம்மைப்படும்.

★


## கலை இலக்கியப் பெருமன்றம்

காமராஜர் மாவட்டக் குழு தயாரிக்கும்

தாமரை—காமராஜ் மாவட்ட

இதழிற்கு

**வாழ்த்துக்கள்**

ஒரு அன்பர்




படிப்பகம்

www.padippakam.com

# பதிக்கப் பிந்தாதே

கா. சிவபெருமான்

இந்தப் பாரினில் ஜீவனாய் வந்து பிறந்த
எங்கள் மகனே உந்தன்
தந்தை சொல்லினை கொஞ்சம் கேளடா
மந்திரம் அல்லவா—வாழ்வு
எந்திரம் அல்லடா.

உன்னை ஈன்றவர் எங்களின் அன்பும் தைரியமும்
உனக்குச் சொத்துக்கள்—எங்கள்
வாழ்வினில் வந்த பலவீனமெல்லாம்
உனக்குப் பாடங்கள்
சொந்தமும் பந்தமும் வந்து உதித்த
ரத்தத்தில் இல்லையடா நல்ல
நல்ல மானுடத் தர்மங்கள் காத்திடவே சிந்தும்
ரத்தத்தில் உள்ளதடா.

ஜாதியும் மதமும் போதைக் கருத்தை
சொல்லிடும் மயங்காதே—அவை
கோழைத் தனத்துக்கும் அச்ச உணர்வுக்கும்
வித்திடும் கலங்காதே
ஆதிக்கம் செய்திடும் கூட்டம் விதைத்திட்ட
நஞ்சுக் கொடிகளடா—நம்மைப்
பாதிக்க வைத்திடும் பாசாங்குத் தனமான
வஞ்சகப் பேய்களடா.

வனத்தில் திரியும் விலங்கைப் போல
வாழ்வைத் தள்ளாதே—இது
உழைக்கும் ஜனத்தின் உலகு என்பதை
மறந்தும் போகாதே
அடக்கி ஆள நினைக்கும் குணத்தை
அழிக்க அஞ்சாதே—உந்தன்
பிறவிக்கும் ஒரு அர்த்தம் உண்டு
பதிக்கப் பிந்தாதே.



படிப்பகம்

www.padippakam.com

# பஞ்சும் பசியும் பட்டினிப் பட்டாளமாக...

இந்திய சுதந்திரத்திற்குப் பிறகுதான் பஞ்சையும், நூலையும் வைத்து பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த கோடானு கோடி சாதாரண நெசவாளர்கள், தொழிலாளர்கள் பஞ்சத்தில் அடிபட்டு பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர். தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் நிறுவனர் தோழர் ஜீவா அன்று 1952 ல் தமிழ் நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் அதன் பொதுச் செயலாளர் தோழர் கே. எஸ்.பார்த்தசாரதி.

இந்தியா முழுவதும் இந்த நிலை இருந்தாலும் இதன் தமிழ் நாட்டில், ஸ்ரீவில்லி புத்தூர் தாலுகாவிலிருந்து தான் 110 பேர்கள் கொண்ட நெசவாளர் பட்டினிப் பட்டாளம் டிக்கட் இன்றி ரயிலேறி சென்னை சென்று போராடுவதாக இருந்தது. இந்நிலையை மாற்றி ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து சென்னை வரை கால்நடையாகவே வந்து சேர வேண்டுமென்று வழிகாட்டினார் அதன் தலைவர் தோழர் ஜீவா. அந்தப் பட்டினிப் பட்டாளத்தினரை சென்னைக்கு வரவேண்டாமென்று அன்றைய சென்னைப் பிரதமராக இருந்த அரசியல் சாணக்கியர் இராஜாஜி அறிக்கை விடுத்தார்.

ஆனால் ''வேலை கொடு அல்லது சோறு கொடு'' என்ற கோஷத்தை முழக்கிக் கொண்டு ஸ்ரீவில்லி புத்தூரிலிருந்து பட்டினிப் பட்டாளம் கிளம்பியது. 500 மைல்கள் கால்நடையாகவே நடந்து நெசவிற்கு ஏற்பட்டுள்ளபஞ்சமாபாதகத்தை பறைசாற்றி வந்த பட்டினிப் பட்டாளத்தினரை தோழர் ஜீவாவும், தோழர் பார்த்தசாரதியும் விழுப்புரம் வரை வந்து வரவேற்றனர். அந்தப் படையின் தலைவர் இராமச்சந்திரபுரம் தோழர் எஸ். பெரியசாமியையும் அப்படையின் செயலர் சத்திரப்பட்டிதோழர் ஏ. எம் சாமியையும் கட்டித் தழுவி வரவேற்று பட்டினி பட்டாளத்தினருக்கு உற்சாகமிக்க வீரவுரையாற்றினர் ஜீவா.



படிப்பகம்

www.padippakam.com

கால்களில் கொப்பளங்கள் வெடித்து பலர் வைசூரி, காலராவினால் பீடிக்கப்பட்டும் அந்த பட்டாளத்தினர் பின்னடையாது சென்னை வந்து போராடி, "கஞ்சித் தொட்டி திறந்து உணவுக்கு ஏற்பாடு செய்வது'' என்ற வெற்றிகரமான முடிவோடு தங்கள்போராட்டத்தை முடித்துக் கொண்டனர். வீரமிக்க இந்தப் பட்டினிப் பட்டாளப் போரை அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் தலைவர் தோழர் எஸ். ஏ. டாங்கே பாராட்டி அறிக்கை விடுத்தார். உலகத் தொழிற்சங்க நிர்வாகக் குழுவே இந்தப் போராட்டத்தைப் பாராட்டித் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

— ஏ. எம். சாமி

●

# செ. ஞானன்

கவிதைத் தளத்தில் காலூன்றிய ஞானன், சிவகாசி வட்டாரத்தைப் பின் புலமாகக் கொண்டு எழுதிய சிறுகதைகளின் தொகுதி "ஒரு எருமை தேடப்படுகிறது" 'ஞானன் கவிதைகள்' 'ஒரு ஊமைக் காதலின் மௌன ராகங்கள்' ஒளிகள் ஆகியவை ஞானன் தமிழுலகிற்கு தந்திருக்கும் கவிதைத் தொகுதிகள். வேறு வழியில்லை இவரது முற்போக்கு நாவல். யாழும் நிலவும் என்ற பண்கவிதைத் தொகுதியொன்றும் வெளியிட இருக்கிறார். இசையார்வம் மிக்க இவர் இசைப் பாடல்களை இயற்றி வெளியிடுவதிலும் ஆர்வம் காட்டி வருகிறார். தபால் துறையிலும் பணியாற்றிக் கொண்டே படைப்பாக்க முயற்சியில் தீவிர கவனம் செலுத்திவரும் ஞானன் திருநெல்வேலி இடக்கும், நையாண்டியும் கலந்த நடையைக் கையாளுபவர் 1975 ல் விருது நகரில் கலை இலக்கியப் பெருமன்றம் தொடங்கப்பட்ட போது அதன் முதல் செயலாளராகவும், 1976 ல் மேற்கு முகவை மாவட்டக் கலை இலக்கியப் பெருமன்றமாக விரிவடைந்த போது அதன் முதற் செயலாளராகவும் பணியாற்றியவர். மீண்டும் 1983 முதல் காமராசர் மாவட்டச் செயலாளராகப் பணியாற்றி வருகிறார்

பு. சி. கணேசன்



படிப்பகம்

www.padippakam.com

# மன்னார்குடி கலை இலக்கியப் பயிற்சி முகாம்

தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்ற தஞ்சை மாவட்டத் தோழர்கள் மிகுந்த கவனத்தோடு மன்னார்குடியில் இரண்டு நாள் கலை இலக்கியப் பயிற்சி முகாம் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பேராசியர் பாரதிப்பித்தன் இருந்த காலத்தில் ஒரு முகாம் நடந்தது. நீண்ட இடைவெளிக்குப்பின் இப்போது ஜூலை 7,8 தேதிகளில் இந்த முகாம் நடந்திருப்பது இடையில் ஏற்பட்டிருந்த தொய்வு நீங்கி விட்டதன் தெளிவான அடையாளம். முகாமில் கலை இலக்கிய ஆர்வமுள்ள சுமார் ஐம்பது தோழர்கள் கலந்து கொண்டார்கள். பெண்கள் கலந்து கொண்டது ஒரு புதிய மலர்ச்சி.

கலை இலக்கியப் பெருமன்றத்தின் முப்பது ஆண்டு சாதனைகள் பற்றிய பேராசிரியர் இரகுபதியின் மதிப்பீடு முதல் நிகழ்ச்சியாக அமைந்தது. துறைவாரியாக நம் சாதனைகளை அவர் பட்டியல் போட்டுக் காட்டிய போது நமக்கு நிறைவாயிருந்தது. சில துறைகளில் நம் தேக்கம் பற்றி அவர் சாட்டை அடியும் கொடுத்தார்.

கவிஞர் பாலா தமிழ் புதுக் கவிதையின் தோற்றம் வளர்ச்சி, முற்போக்காளரின் சாதனைகள், குறைபாடுகள் அனைத்தையும் விளக்கினார். புதுக்கவிஞர்களுக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே அது அமிர்தமாக அமைந்தது. பிற்பகல் நாவலாசிரியர் தனுஷ்கோடி ராமசாமி சிறுகதைகள் பற்றி தன் அனுபவங்கள் மீது நின்று கொண்டு சிறப்பாக உரையாற்றினார். உள்ளடக்கம், உருவம், கதையில் ஆசிரியரின் தலையீடு, படைப்பாளனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் இவை பற்றி உதாரணங்களோடு கூறினார்.

சங்க இலக்கியத்தில் அக்காலத்து சமுதாய அமைப்பின் பிரதிபலிப்புகள் எவ்வாறு வெளிப்பட்டுள்ளன என்பதை புலவர் ஆ.பா. பாலைய்யன் பல உதாரணங்களோடு விளக்கினார். சமுதாயத்தின் வர்க்கப் பிளவுகள் அக்காலத்துக் கவிதைகளின் உள்ளடக்கத்தை எவ்வாறு பாதித்திருந்தன என்பதை



படிப்பகம்

www.padippakam.com

அவர் உரை தெளிவாகக் காட்டிற்று.

இரவு மன்னார்குடி கிளைத் தலைவர் புலவர் கலிய பெருமாள் தலைமையில் அமரர் பாரதிப் பித்தன் அரங்கில் பாரதிதாசன் நூற்றாண்டு விழா, அம்பேத்கார் நூற்றாண்டு விழா, கலை இலக்கியப் பெருமன்றத்தின் முப்பதாம் ஆண்டு விழா ஆகியன சிறப்பாக கொண்டாடப்பட்டன. கலை இலக்கியப் பெருமன்றத்தின் மூலவர் பேராசான் ஜீவாவின் இலட்சியங்கள் கலை இலக்கியப் பெருமன்றத்தின் மூலம் எவ்வாறெல்லாம் நடைமுறை படுத்தப் பட்டுக் கொண்டு வருகின்றன என்பதை அவர் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்.

சிந்தனையாளர் பைரன் 'அம்பேத்கர் அனுபவங்கள்' என்ற தலைப்பில் அம்பேத்கர் வாழ்வையும்பணிகளையும்தாழ்த்தப்பட்டோர் பிரச்சனையின் இன்றைய சிக்கல்களையும் தேர்ந்த சமூக இயலாளனாக தனக்கே உரிய முறையில் கம்பீரக் குரலில் பேசினார். முன்னாள் அமைச்சர் மன்னை நாராயணசாமி, பாரதிதாசன் கவிதைகளில் இழையோடும், மனித நேயத்தை உழைக்கும் மக்கள்பால்அவருக்கிருந்த அளப்பரிய பாசத்தை, உலக சமாதானப்பற்றை புதிய உலகு காணும் அவரது ஆர்வத்தை பாரதிதாசன் கவிதைகள் கொண்டே விளக்கி கூட்டத்தினரை சிலிர்க்க வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் செல்வராஜ், நகர மன்ற தலைவர் சிவா, இராஜ மாணிக்கம் பேராசிரியர் மதார் மைதீன், எம். சின்னக்கண்ணு, வடுவூர் நாராயணன், சா. ஞான சம்மந்தம், கி.வ. துறையரசன், வி. அருணாசலம் இன்னும் பலர் விழாவை வாழ்த்தினர்.

எழுச்சிக் கவிஞர் வாய்மை நாதன் தலைமையில் புதுவைக் குயிலின் புதுமைக் கானம் என்ற தலைப்பில் கவிஞர்கள் ஆரூர் தமிழ்நாடன், கிரு. பாண்டியன், மா. சி பூபாலன், நாகரத்தினம், கணேசன், இரா. காமராசு, செழியரசு ஆகியோர் கவிதைகளை முழங்கினர். சிந்து வடிவத்தில் வாய்மைநாதன் தந்த வரிகள் வந்திருந்தோர் சிந்தையெல்லாம் கொள்ளை கொண்டன.

நாவலாசிரியர் பொன்னீலன் தலைமையில் பாவேந்தர் பாரதிதாசன் சீர்திருத்தக் கவியா? புரட்சிக்கவியா? என்றதலைப்பில் பட்டிமன்றம்நடந்தது. பேராசிரியர் ரகுபதியின் தலைமையில் புலவர் மு. சந்திரசேகரன், மா.சி. பூபாலன் ஆகியோர் பாவேந்தர் சீர்திருத்தக் கவியே என்றும் தனுஷ் கோடி ராமசாமி தலைமையில்



படிப்பகம்

www.padippakam.com

பாலையய்யன், பைரன் ஆகியோர் அவர் புரட்சிக் கவியே என்றும் அவரது கவிதைப் பூக்களை எய்தே போர் புரிந்தனர். புரட்சிக் கவியே என்ற கட்சி வெற்றி பெற்றதாக பொன்னீலன் முடிவுரையில் தீர்ப்பளித்தார்.

இரண்டாம் நாள் முதல் வகுப்பை நாடக மேதை பேராசிரியர் இராமானுஜம் நடத்தினார். நிஜ நாடகம் என்பதற்குச் சிறப்பான ஒரு விளக்கம் தந்து நாடகம் நிகழ்த்தும் முறையை செயல்முறை மூலம் விளக்கினார். 'இலக்கியத்தில் கீர்த்தனைகள்' என்ற தலைப்பில் கவிஞர் வாய்மைநாதன் பத்தொன் தாம் நூற்றாண்டுக் கீர்த்தனை களை அறிமுகம் செய்துவிட்டு, கோபாலகிருஷ்ண பாரதியின் நந்தன் கீர்த்தனையின் நயங் களை சுவையோடு விளக்கினார். பிற்பகலில் அழகியலை பொன் னீலன் அறிமுகம் செய்து வைத் தார்.

மாலையில் தாமரை சிறப்பு மலர் தயாரிப்பது, மாநிலமாநாட் டுக்கான தயாரிப்புகள் ஆய்வது ஆகியன பற்றிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அன்று இரவு நடைபெற்ற கலை இலக் கிய நிகழ்ச்சிகள் தஞ்சை கலை இலக்கிய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தின் முன்னுரை என்றே சொல்லலாம். ஆ. பா. பாலையய்யன் தலைமையில் தொடர்ந்த இளந்தளிர் நிகழ்ச்சி களில் தோழர் கலியபெருமாளின் மகனும், மகளும் இன்னுமொரு குழந்தையும் முறையே ஜீவா, பாரதி, பாரதிதாசன் பற்றி பேசி யவை கூட்டத்தினரை பிரமிக்க வைத்தன. அதுபோல் 'பாரதி பிடித்த தேர் வடம்' என்ற நாட கத்தையும் சிறுவர்கள் அற்புத மாக நடித்தார்கள். மத நல் லிணக்கக் கருத்தை அடிப்படை யாகக் கொண்ட அந்த நாடகம் தஞ்சை மாவட்டம் உருவாக்கிய மிகச் சிறந்த நாடகங்களில் ஒன்று. இன்னொரு பிரமிப்பூட் டும் விஷயம் பட்டுக்கோட்டை கிளைச் செயலர் தோழர் எஸ். மனோகரின் நடனங்கள்!

முதல் நடனம் விவசாயிகளின் வாழ்வு பற்றியது. அவருடைய மென்மையான, நளினமான அசைவுகள், அடவுகள், முக பாவனைகள் எல்லாமே அருமை. இறுதியில் அறுவடை செய்யும் விவசாயியின் ஆனந்தக் களிப்பை அவர் அபிநயித்துக் காட்டிய விதம் பார்வையாளர் களின் உணர்வுகளைப் பிரவ கிக்கச் செய்து விட்டது. அதே போல் பாரதிதாசனின் குறத்திப் பாட்டிற்கு அவர் ஆடியவிதம் நுட்பமான ஒளி அசைவில் குறத்தியின் மனமயக்கத்தை அவர் அபிநயித்துக் காட்டிய போது, அவர் பெண்ணாய் மாறி மேடையின் மீது மிதப்பது போலவே தோன்றியது.



படிப்பகம்

www.padippakam.com

சிவசிதம்பரம் குழுவினரின் 'மாப்பிள்ளைக் கடை' நாடகமும் மிகுந்த கலை நேர்த்தியோடு அமைந்திருந்தது. தஞ்சை முகிலனின் நடிப்பு, நாடகத்தை மேலும் ஆழப்படுத்திற்று.

மாப்பிள்ளையை விலைக்கு வாங்க ஏங்கி நிற்கும் தந்தையின் துயரத்தை வெளிப்படுத்த விமலாதித்தனும் தோழர்களும்.

> காஞ்சி காமாட்சிக்கும்
> மதுரைமீனாட்சிக்கும்
> மாசமொரு கல்யாணமாம்
> ஏழையின் — கண்களிலே
> என்றைக்கும் நீர்க்கோல
> மாம்...

என்ற வரிகளை சோகமாய்ப் பாடிய போது அவ்வளவு நேரமும் கலகலத்துச் சிரித்துக் கொண்டிருந்த பார்வையாளர்கள் அப்படியே சோகத்தில் வெம்பி சுருங்கி சுருண்டு போயினர்.

ஆக்கட்டி, பாவாடை சட்டை கிழிஞ்சு போச்சுதே போன்ற கே. ஏ. ஜி. பாடல்களை புதிய தோழர்களும் மாதர் இயக்கத் தோழியர் வசந்தாவும் அருமையாகப் பாடினார்கள்.

மொத்தத்தில் இரண்டாம் நாள் கலைநிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்திருந்தன முகாமில் பெருமன்ற நிதியாக ரூபாய் நூறு மாவட்டத் தலைவர் அ.ப பாலையின் பொதுச் செயலர் பொன்னீலனிடம் அளித்தார். இந்த முகாமை ஏற்பாடு செய்த மாநிலச் செயலாளர் கவிஞர் வாய்மைநாதன், மாவட்டச் தலைவர் அ. ப. பாலைய்யன், மாவட்டச் செயலாளர் இரா. காமராசு, மன்னை கிளைத் தலைவர் கலிய பெருமாள், செயலாளர் கணேசன் பொருளாளர், தமிழ் மணி மற்றும் மாவட்ட பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்!

—இரா. காமராசு


நல்வாழ்த்துகள்

போன்: 21 83.
20511.

**தி மெஜஸ்டிக்**
**ஆப்செட் பிரிண்டர்ஸ்.**
**த பெ எண்: 89**
**சிவகாசி.**


படிப்பகம்

www.padippakam.com

# அமரர் எஸ்.எஸ். ஆர். நாயுடு

தூய வெள்ளைக் கதர் ஜிப்பா; கதர் வேஷ்டி; ஆஜானுபாகுவான தோற்றம். பிரியங்கள் நிறைந்த வெள்ளை மனத்தை எப்பொழுதும் வெளிகாட்டிக் கொண்டிருக்கும் ... முகம் நிறைந்த சந்தோஷப் புன்னகைகள் இதுதான் எஸ். ஆர். நாயுடுவின் தோற்றம்.

வளமிக்க விவசாயக் குடும்பத்தில் பிறந்து சிவகாசிப் பகுதியிலேயே முதல் வழக்கறிஞரானவர். 'வக்கீல் நாயக்கர்' என்று அழைக்கப் பெற்றவர். காந்தியடிகளின் அழைப்பை ஏற்று பெரும் பொருளீட்டித் தந்த தம் வழக்குரைஞர் தொழிலைத் துறந்து நாட்டு விடுதலைக்கான அறப் போரில் குதித்து பல முறை சிறை சென்றார். இப் பகுதியிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களிடம் தேசப்பற்றையும், சுதந்திர எழுச்சியையும் விதைத்த விவசாயி.

நாடு விடுதலை பெற்றபின் சிவகாசித் தொழிலதிபர்கள் சிலர் டில்லி சென்று பிரதமர் நேரு அவர்களைச் சந்தித்து தம் நகரில் தொழில் வளர்ச்சியடைய மத்திய அரசாங்கம் உதவ வேண்டும் என முறையிட்டனர். அதற்கு பண்டித நேரு, "உங்கள் பகுதியில் உள்ள பெரியவர் எஸ். ஆர். அவர்களிடம் சொல்லுங்கள்" என்று கூறி அனுப்பி விட்டார் திரு. எஸ. ஆர். அவர்களின் துணையோடு சிவகாசி தொழிலில் வளர்ச்சி கண்டது.

நாயுடு சமூகத்தினர் அதிகமிருந்த அன்றைய சிவகாசித் தொகுதியில் ஜி. டி. நாயுடு காமராஜரை எதிர்த்து நின்ற போது எஸ். ஆர். நாயுடு காமராஜருக்காக கிராமம் கிராமமாகச் சென்று பிரச்சாரம் செய்து மிக அதிகமான வாக்கு வித்தியாசத்தில் காமராஜரை வெற்றி பெறச் செய்தார.

திரு. எஸ். ஆர். நாயுடு ராமநாதபுரம் மாவட்டக் கழகத்தின் தலைவராகயிருந்த பொழுது தன் இனிய நண்பரான திரு. தெ. து. சுந்தரவடிவேலு அவர்களின் துணை கொண்டு மாவட்டத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் ஆரம்பப்பள்ளிகளையும், ஐந்து மைல்களுக்கு ஒரு உயர்நிலைப் பள்ளியையும் திறந்து கல்விக் கண்ணைத் திறந்து வைத்தார். விவசாயிகளின் பிள்ளைகள் ஆசிரியர்களாக வந்தால் தான் விவசாயிகளிடையே கல்வி பெருகும் என்



படிப்பகம்

www.padippakam.com

பதால் சிவகாசியை அடுத்துள்ள வடமலாபுரத்தில் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை நிறுவினார். இப்பகுதி மக்கள் இவரை கல்வித் தந்தை எனப் போற்றுகின்றனர்.

சாதி மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு வாழ்ந்த திரு. எஸ். ஆர். நாயுடு ஆழ்வார்களிடமும் அவர்களின் பாசுரங்களின் மீதும் அளவற்ற ஈடுபாடு கொண்ட சிறந்த வைஷ்ணவராக வாழ்ந்தார். மாவட்டக் கழகத் தலைவர், சட்ட மன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் எனத் தொடர்ந்து பெரும் பொறுப்புக்களில் இருந்தும் தூய்மை காத்த காந்தீயவாதி திரு. எஸ். ஆர். தன் தாய் தந்தையர் வீட்டிலேயே வாழ்ந்த இத்தியாகி புதிதாக சிறு சொத்தும் சேர்க்காமல் தன் தந்தையர் வீட்டிலேயே தன் தூய வாழ்வை நிறைவு செய்து கொண்டார்.

கி. துரைராசு.

★

---

Best Complements From :

# THE CORONATION ARTS CRAFTS

(Designers Printers & Binders)

Entrust your quality Offset Printing, Publishing and designing requirements to us. We have the expertise and Technology to achieve Higher limits in excellence.

Do Call or write for further information.

*MADRAS OFFICE :*
KALEEL SHIRAZI ESTATE,
321, Pantheon Road,
Egmore, Madras-600 008..
Phone: 044-867377
Telex: 041-6841 Arts in

*FACTORY & OPERATIONS*
143 A, Thiruthangal Road.
Sivakasi-626 123.
Phone: 04560-22454
Telex: 0418-227 CAC IN
Grams Arts Crafts.

*CALENDARS ● DIARIES ● GREETING CARDS ● BOOKS & PUBLISHING ● DESIGNING ● POSTERS ● SALES PROMOTION MATERIAL ● TRADE LABELS ●*

---



படிப்பகம்

www.padippakam.com

# "கருவாட்டுக் குழம்பு"

அவன்: கருவாட்டுப் பேட்டையிலே
கருவாடு வாங்கிக்கிட்டு
கச்சேரி ரோட்டுமேலே
போறவளே!
ஏலேலங்கடி ஏலோ!
அந்த கருவாடு என்னவெல!
ஏலேலங்கடி ஏலோ

அவள்: கருவாடு ஐஞ்சு ரூவா
கட்டுக் கூலி மூணு ரூவா
சிறுவாடு வச்ச ரூவா
சில்லரையா சேத்த ரூவா
ஏலேலங்கடி மாமா
இந்த கருவாடு ஆச
வரலாமா?

அவன்: சேலத்து மாம்பழமே
செங்குளத்துச் செங்கரும்பே
கருவாடு வெலயக் கேட்டா
சிறுவாடு சொல்லுறியே
ஏலேலங்கடி ஏலோ
சிறுவாடு எனக்கெதுக்கு
கருவாட்டு ஆசயடி!

அவள்: மாம்பழந்து ஆச வச்ச
மச்சக்கார ராசாவே!
கருவாடு காய்ச்சி வச்சு
கச்சிதமா ரசமும் வச்சு
ஏலேலங்கடி மாமா
நாளைக்கு மாலையிலே
நான் வரட்டா வீடுதேடி....



படிப்பகம்

அவன்: மாமனுக்கு வேலையில்ல
மவராச மில்லுலதான்
மல்லியப்பூக் கொண்டைக்காரி
மனசுக் கேத்த சொல்லுக்காரி
ஏலேலங்கடி ஏலோ
கருவாட்டு குழம்போட
இருமாம்பழமும் கொண்டுவாடி!

அவள்: மில்லு வேல இல்லாம
ஜல்லிக் கட்டுக் காளபோல
முறுக்கு மீச முறுக்கிக்கிட்டு
முண்டாசுமே கட்டிக்கிட்டு
ஏலேலங்கடி மாமா
சிவகாசிச் சீமையில...?
நீசுத்தலாமா மாலையிலே

அவன்: கன்னங் கருத்தவளே
கருவாட்டுக் குழம்பழகி
மின்னும் இடையழகி
என்னோடு பாய்விரித்து
ஏலேலங்கடி ஏலோ
மாம்பழத்த நான்தின்னத்
தாடி-நீவாடி!

அவள்: மில்லுவேல போனாலென்ன
மீசயுள்ள மாமாவே
முருகஞ்சாமி கோயிலிலே
மாலமாத்தி ரெண்டு பேரும்
ஏலேலங்கடி மாமா
ஜோடியா ஆயிடுவோம்
சொர்க்கந்தா நான் தாரேன்!



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# வில்லிசை வேந்தர் பிச்சைக்குட்டி

சாத்தூர்
—சி. வண்ணமுத்து

மார்க்சிய வாதியாக விளங்கியிருந்த ச. பா. பிச்சைக்குட்டி சாத்தூர் ஆ. வை. உயர்நிலைப் பள்ளிக்கு ஆசிரியராகப் பணியாற்ற வந்தார். சக ஆசிரியர்கள், பள்ளி மாணவர்களைக் கொண்டு வில்லிசைக் குழு அமைத்து வில்லிசையைத் தொடங்கினார்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களை சாத்தூருக்கு அழைத்து வந்து வில்லிசை நிகழ்ச்சி நடத்தி நிதி சேர்த்து நோயுற்றிருந்த ஆ. வை. உயர் நிலைப் பள்ளிக்கு அளித்து பள்ளியை வளப்படுத்தி வளர்த்தார். பின் இவருடைய முற்போக்கு எண்ணங்களோடு நிர்வாகம் முரண்பட்டதால் ஆசிரியர் பணியிலிருந்து நீங்க நேர்ந்தது.

பின் வில்லிசையே வாழ்க்கையாகக் கொண்டார். தமிழகம் முழுக்க தன் வில்லிசைக் குழுவைக் கொண்டு நிகழ்ச்சிகள் நடத்தினார். அவர் எடுத்துக் கொண்ட கதை புராண, வரலாற்றுச் சித்திரங்களாக இருப்பினும் அதில் மக்களுக்குத் தேவையான புதுமைக் கருத்துக்களை அழகுற எடுத்துக் கூறி மக்கள் கலைஞராகத் திகழ்ந்தார். பாரதியின் பாஞ்சாலி சபதத்தை எல்லாக் கிராமங்களும்கும் தன் வில்

+++



படிப்பகம்

www.padippakam.com

## நாடக மேதை விஸ்வநாததாஸ்

“கதர்க் கொடி கப்பல் தோணுதே” என்ற வீர கானத்தை நாடக மேடையில் ஒலித்த விஸ்வநாததாஸ் சிவகாசியைச் சேர்ந்தவர். சுதந்திரப் போராட்டக் காலத்தில் அந்நியர் ஆதிக்கத்தை எதிர்த்துக் குரல் கொடுத்த கலைஞர்களின் வரிசையில் குறிப்பிடத் தகுந்தவர். நாடக மேடையில் நடித்துக்கொண்டிருக்கும்போதே உயிர் துறந்த, உயிர்ப்பான கலைஞரிவர். ஆங்கில அதிகாரிகளுக்குச் சிம்ம சொப்பனமாக இவரது நாடகக் கருத்துக்கள் விளங்கியதோடு மக்கள் மத்தியில் எழுச்சி வாட்டுபவையாகவும் அமைந்திருந்தன.

---

லிசை மூலமாகக் கொண்டு போய் தமிழர்களை பாரதியின் கருத்துச் செறிவை உணரச் செய்தார்.

தமிழ் வழங்கும் எல்லா மாநிலங்களிலும், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய வெளிநாடுகளிலும் வில்லிசை நடத்தினார். வில்லிசை அரசு, வில்லிசை வேந்தர், வில்லுப்பாட்டு பிரவீணா, வில்லுப்பாட்டு விஷாரதா, கலைமாமணி போன்ற விருதுகளைப் பெற்றார். அன்றைய தேசியவாதிகளான ராஜாஜி, சா. கணேசன், மார்க்சீய வாதிகளான ஜீவா, பாலன், கோவில்பட்டி அழகர்சாமி, எழுத்தாளர் கு. அழகிரிசாமி, தொ.மு.சி. ரகுநாதன், நடிகமணி, டி.வி. நாராயணசாமி போன்றோருடன் பழகி பாராட்டினைப் பெற்றவர். லட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் அவர்களுக்கு வில்லிசை ஆசிரியராகத் திகழ்ந்தார்.

இவருடைய கதை சொல்லும் மரபும் கொள்கைத் தெளிவும், நகைச் சுவையும் அபூர்வமானது இந்த மக்கள் கலைஞர் வழங்கிய வில்லிசை மரபு தொடர்ந்து போற்றி பின்பற்றப்பட்டு வருகிறது.

---

## புத்தகப் பிரியர்

சேதுராமலிங்கம் என்ற முழுப் பெயர் கொண்ட 64 வயதாகும் எஸ்.எஸ்.ஆர் லிங்கம் கூமாப்பட்டிக்காரர் இதுவரை 24,'89 நூல்கள் படித்துள்ளார். தனது வீட்டில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களைச் சேமித்து வைத்துள்ளார். இம்மாவட்டத்தில் நடைபெறும் க.இ.பெ.மன்றக் கூட்டங்களில் தவறாது கலந்து கொள்பவர். இன்றைய மூத்த தமிழ் எழுத்தாளர்களுடன் நேரடித் தொடர்பு கொண்டவர்.



படிப்பகம்

 www.padippakam.com

# கி. ராஜநாராயணன் கடிதங்கள்

—எஸ் எஸ் ஆர் லிங்கம்

சமீபத்தில் வந்த கி. ராஜ நாராயணன், கடிதங்கள் என்ற புத்தகம் படித்தேன். டி. கே. சி. கடிதங்களுக்குப் பின்னால், என்னை கவர்ந்த நல்ல புத்தகம் நண்பர் கி. ராஜநாராயணனின் தங்கு தடையறற பேச்சுமொழி நடைக் கடிதங்களாகும்.

'என் மனசு குற்றாலத்தில் தான் உள்ளது. உங்களை எல்லாம் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டே இருக்கிறது. போன தடவையை போல இந்த தடவையும் 13 நாள் இருந்து இருக்கிறேன். ஏதோ மூன்று நாள் தங்கி இருந்ததுபோல தோன்றுகிறது.' இதை கி. ரா. எழுதும் போது, டி. கே. சியிடம், அவரது தனித்துவமான ஈடுபாடு வாசகருக்கு புரிகிறது. 'நான் கரிசல் காட்டு பாலைவனத்தில் பிறந்தவன். வாழ்க்கை என்பது எவ்வளவு உயர்தரமானது அது எந்த எந்த பகுதிகளை, எல்லாம் தொட்டுக் கொண்டு இருந்தால், இன்பம் சுரக்கும் பூரணம் அடையும் என்பதெல்லாம் உங்களோடு பழகிய பின்புதான் தெரிந்து கொண்டேன், உங்களை, தெரிந்தபிறகு இந்த உலகத்தை தெரிந்து கொண்டேன். இதை நான் புகழ்ச்சிக்காக எழுதவில்லை, உண்மையை, மிச்சம் வைக்காமல் உங்களிடம் கூறுகிறேன். இதை உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வது ? உங்களை, நான் சந்திக்காமல் போயிருந்தால், எனக்கு எவ்வளவு விசயங்கள் தெரியாமலே போய் இருக்கும் ?' இதை படிக்கும்போது நாமும் டி. கே. சி. யிடம் பேசி, அந்த அனுபவங்களை, நாமும் அடைந்துவிட்டது போல தோன்றுகிறது அல்லவா?

பல நண்பர்களுக்கு அவர் எழுதிய கடிதங்கள் மிகவும் சுவையானது. மிகமுக்கியமாக தனுஷ்கோடி ராமசாமி, அ. முத்தானந்தம், சுந்தரராமசாமி, வீரவேலுச்சாமி, நடராஜன் இவர்களின் கடிதங்கள் பல செய்திகளை, பல பல ரசனைகளை வாசகருக்கு சொல்லுகிறது. மிக அதிகமான கடிதங்கள், 26 கடிதங்கள் எழுத்தாளரும், கவிஞரும் ஆன மீராவுக்கு எழுதியுள்



படிப்பகம்

www.padippakam.com

ளார். எல்லாக் கடிதங்களிலும், கரிசல் மண் மணக்கிறது. தான் படித்த நூல்களின் விமர்சனம் மணக்கிறது. வீட்டின் சூழ்நிலைகளுடன், கரிசல் பூமியின் தட்ப வெப்ப நிலைகளும் சுவையாக சொல்லப்படுகிறது. கவிஞர் மீராவுக்கு எழுதிய கடிதங்களை, நான் இரண்டு தடவை படித்தேன். நூலுக்கு மீராவின் முன்னுரை அழகாக அமைந்து உள்ளது.

வாழ்க்கையை, மனிதர்களை, கரிசல் பூமியை இனம் கண்டு இலக்கியம் படைப்பதில், கி. ரா. முக்கியமானவர். மொழியைப் பற்றி, பழமொழிகள் பற்றி, திருவிழாக்கள் பற்றி, விவசாயம் பற்றி பல பல புத்தகங்கள் பற்றி, இந்தக் கடிதங்கள் மூலம், நிறைய தெரிந்து கொண்டேன். படிப்படியான வளர்ச்சி, எப்படி சமூக நிகழ்வுகளை, நிகழ்த்தி உள்ளது என்பதையும் தெரிந்து கொண்டேன். கவிஞர் மீரா சொன்னது போல, 'இந்த கடிதங்கள், சொந்த விவகாரங்களுக்கு அப்பால்பட்டு நிற்கிறது.

சமகாலத்து வரலாற்று செய்திகளை, இலக்கிய நிகழ்வுகளை, விவரிக்கும் அற்புதமான நூல் கி. ராஜநாராயணன் கடிதங்கள்.'

---

# போதுமடா சாமி

நல்லவங்க வாழ்வுதனை நலியவைக்கும் தட்சணை
உள்ளவுங்க பேரெடுக்க உதவுகின்ற தட்சணை
ஆலயத்தில் குடியிருக்கும் ஆண்டவர்க்கு தடசணை
ஆரத்தி எடுக்கின்ற ஆட்களுக்கும் தட்சணை
கல்லூரி வாசலிலே காலைவைக்க தட்சணை
கல்யாணம் கட்டிவைக்க கைமேலே தட்சணை
பிள்ளை பெறும் மகராசி பொண்ணைப் பெத்தா பிரச்சினை
போதுமடா சாமி இந்த உலகத்திலே பிரச்சினை
பூமிக்கிதை எடுத்துச்சொன்னா நமக்கு வரும் நிந்தனை

—வி. ஸ்ரீனிவாசன்



படிப்பகம்

www.padippakam.com

# உலகையே ஒரு பூவாக்கி

'எல்லாரும் ஏறியாச்சுன்னா.. புறப்படலாம்ல.... ஏன் இப்படி லேட் பண்றாங்க'.... மனசுக்குள் ஊமைக்கோபம்.

'என்னையே.... பார்த்துகிட்டிப்பாங்க—நல்ல வேளை இந்த சீட் கெடச்சது—' முருகேசன் வெளியிலே பார்த்துக்கிட்டிருந்தான். 'இந்த நேரத்திலாவது— 'வெக்கம்' நாகரீகம்'னு பாக்காம கூட்டத்தோடு முண்டியடிச்சி ஏறினது— நல்லாப் போச்சு— நின்னுக்கிட்டிருந்தோமோ— பலபேர் மொகத்த பாத்துத் தொலைய வேண்டியிருந்திருக்கும். அவங்க பார்வை அப்பா—சகிச்சுக்கிட முடியாது.! ஒண்ணு ரெண்டு அரவேக்காடுக நேர்ல இல்லாட்டாலும் சாடையாவாவது பேச்சப் பத்தி கமென்ட் அடிச்சிருவாங்க—'

இவங்களப் பொறுத்தவரை வாழ்க்கையே பொய் சம்பிரதாயம்—, பணம்,— பதவி தான்.

அந்தப் பிரியாவிடை கூட்டங்கூட உண்மையாயில்ல. இது ஒரு சம்பிரதாயமான போலித்தனம், அவ்வளவுதான்.

முருகேசனுக்கு அதுல கொஞ்சங்கூட விருப்பமில்ல மத்தவங்கெல்லாம் சம்மதிச்சுட்டதால— தான் ஒருத்தன் மட்டும் எதுத்துக்கிட்டு நிக்க வேண்டாம்; அது அவசியமில்லேன்னு தான் சேந்துக்கிட்டான்.

தங்கள் தலைமைத் தேர்வாளர்களை 'கொடும் புயலில் அகப்பட்ட கலத்தை கலங்காது செலுத்திய கடமைமிக்க மாலுமி போன்றவர்'— என்றும், மனுநீதிச் சோழன்' 'ஆரியப்படை கடந்த பாண்டியன், நெடுஞ்செழியனை, உவமையாக்கியும்

—தனுஷ்கோடி ராமசாமி

புகழ்ந்து தள்ளினார்கள்— ஒருவர் தலைமைத் தேர்வாளரின் நரைக்காத தலைமயிருக்காக பிசிராந்தையாரைக் கொண்டு வந்து நிறுத்தினார். இவங்களையெல்லாம் மிஞ்சனும்கற வெறியில ஒருவர் —'தூய உள்ளம்— அன்புள்ளம், தொல்லுலசமக்களெல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் கொண்ட கருணையாளர்'ன்னு ஒப்பிச்சார்— எல்லாம் பொய்—சகிக்க முடியாதது.

ஸ்வீட், காரம், காப்பி சாப்பிட்டபடியே இத்தனையும்



படிப்பகம்

www.padippakam.com

நடந்தது. முருகேசனை பேசும் படி வற்புறுத்திக்கிட்டிருந்தாங்க. அவசரமானவர்கள் இதற்கிடையே முந்தி தாங்களே எழுந்து ஓடிப் பேசினார்கள்—

முருகேசன் இந்தக் கூட்டத்தில் பேசக் கூடாதுன்னுதான் இருந்தான். பலரும் தொடர்ந்து கூப்பிட்டாங்க லிட்டில் ஃப்ளவர் ''வாங்க'' அன்பு பொங்க வதனமசைத்தாள்.

இடத்திலிருந்து எழுந்து தலைவருக்குப் பக்கத்தில் போய் நின்னப் பெறகுதான் 'வந்திருக்க வேண்டாமோ'ன்னு தோணிச்சு.

அவன் பேச்சின் தொடக்கமே அனைவரையும் திடுக்கிடச் செய்தது. மயான அமைதி. முதலில் வராண்டாவில உலாத்தினவங்க ஹாலுக்கு முன்னால நின்னாங்க உள்ளே வந்தாங்க— கூட்டம் பெருகியது— அவன் பேசிக்கிட்டே போனான்—.

பஸ் புறப்பட்டது. புழுக்கம் வழிந்தோடியது. இளைய வேப்ப மரங்களுக்கு மனசுக்குள் 'வணக்கம்' சொன்னான். மீண்டும் இந்த இடத்தை தரிசிக்கும் வாய்ப்பு வாழ்வில் என்றேனும் நேர்ந்தால் சந்தோஷமாக இருக்கும்'னு நினைக்கும் போதே விழிப்படலத்தில் நீர் பரவியது—

இறுதி வரிசை வேப்பமரம். அவன் பார்வை அங்கேயே நின்னது. நேத்து மத்யானம் ஒரு மணிக்கு மேல் முருகேசன் ஒயிட் பேண்ட், ஒயிட் சர்ட் இன் பண்ணி கிழக்கே இருந்து நடந்து வர்றான்.

அந்த வேப்பமரத்தடியில் அமர்ந்திருந்தாங்க வயதான சிஸ்டரும் லிட்டில் ஃளவரும். அவள் கண்கள் அவன் திசை வழியில். நெருங்கிட்டான். அவள் எழுந்தாள். ஓரடி முன் வைத்து அவன் பாதையில். அவளது தாமரை மலர்க்கைகள் நிறைய வெள்ளை நுண் திராட்சைக் கொத்துக்கள்— இருவருடைய பார்வைகளும் சங்கமித்து இறுகின. ஒளி வெள்ளம்— ஒரு கொத்தில் சிறிது எடுத்து அவளைப் பார்த்தபடியே வாயில் போட்டுக்கிடுறான்— அவள் முகதில் பொங்கி வழிவது—?

இப்பொழுது பஸ் செம்மண் சாலையில் தாழ்ந்து ஓடுகிறது.

---

ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் வரலாற்றை திருமலை திருப்பதி தேவஸ்தானத்திலிருந்து ரூ' 7000 நிதியுதவி பெற்றுவித்துவான் கு.சங்கர நாராயணன் அழகிய நூலாக வெளியிட்டுள்ளார்.

---



படிப்பகம்

www.padippakam.com

## பி. எஸ். குமாரசாமிராஜா

1898 ஜூலை எட்டாம் நாள் இராஜபாளையத்தில் பிறந்தார். இளம் வயதிலேயே சமுதாய தொண்டுப் பணிகள் செய்தவர். 1916 முதல் தேச விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு பல முறை சென்றவர்.

தனது வீடு, நிலம், சொத்துக்கள் யாவும் தேசத்துக்காக அர்ப்பணித்து காந்தி கலை மன்றம் நிறுவி நூலகம் இலக்கியப்பிரிவு இசைப்பிரிவுகளை துவக்கிவைத்தார். பிரிக்கப்படாத சென்னை மாகான முதலமைச்சராகவும் ஒரிசா ஆளுனராகவும் பணி புரிந்தார். காந்தியடிகளை இரு முறைகள் இராஜபாளையம் அழைத்து வந்து தன் இல்லத்தில் தங்கவைத்தார்.

—கொ. மா. கோதண்டம்

'கூட்டத்தில் நான் பேசினதில எது தப்பு?' எதுவுமே தப்பில்ல' 'எல்லாமே தப்பாவே மத்தவங்க எடுத்திருப்பாங்க—' எடுத்திட்டுப் போகட்டுமே !

''மத்த ஹால்கள்லேயெல்லாம் ஐந்தாறு பெண்கள் இருந்தாங்க. பத்துப் பன்னெண்டு பேர் கூட இருந்தாங்க— நம்ம ரெண்டு தலைமைத் தேர்வாளர்கள் கீழே பெண்களே இல்லாம இருந்தது. நல்ல வேளை— எங்க தலைமைத் தேர்வாளரின் ஸ்பெஷல் அஸிஸ்டென்ட் ஒரு பெண்ணாயிருந்தது. இல்லாட்ட இந்த முகாம் முழுக்க நமக்கு ரொம்ப போரடிச்சிருக்கும்—னு'' முருகேசன் பேச்சை ஆரம்பிச்ச உடனே எல்லாம் அசந்துட்டாங்க.

சிஸ்ட்டர் லிட்டில்ஃபிளவருக்கு முருகேசனைப் புரிஞ்சுக்க முதல் நாள் காலை, மாலை, மறுநாள் காலைப் பகுதிவரை முடியல.

தொடர்ந்து வெறும் சம்பிரதாயங்கள வச்சுக்கிட்டு அவனோட மறுபட்டுக்கிட்டிருக்க முடியல.

முருகேசனோடு பி.எட். படிச்ச ரட்சண்யதாசன் முதல் நாள் அந்நியோன்யமா பேசிக்கிட்டிருந்தார். அப்புறம் குறஞ்சு போச்சு. அடுத்த குழுவிலிருந்த அமல்ராஜ், மரியபங்கராஜ் முதலிய கத்தோலிக்கர்களோடு சேர்ந்து சேர்ந்து பேசினார் அவங்க மூணுபேரும் முருகேசன பகைமையோட பாத்தாங்க.

''அதென்ன— 'இங்கே வர்றது— இதப் பாக்றது'ன்னு பேசுறீங்க— 'இங்க வாங்க சிஸ்ட்டர்' இதப் பாருங்க சிஸ்ட்டர்ன்'னு, சொல்லுங்க அவங்க ஒரு துறவி. புனிதர். நீங்க'சிஸ்ட்டர்'ன்னு தான் கூப்பிடணும்'' மூவரும் சிடுசிடுத்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

"நான் அவங்கள சிஸ்ட்டர்னு கூப்பிபிடாதது அவங்கள எந்த விதத்திலும் அவமதிக்கறதா நான் நெனைக்கல. நான் சிஸ்ட்டர்ன்னு கூப்பிடறது அவங்கள அந்நியப்படுத்தி அவமதிக்கறதா நான் நெனைக்கிறேன்."

ஓங்க கொள்கைய ஓங்களோடேயே வச்சுக்கங்க—'' கடும் சின மொழியோடு பேச்சை முறிச்சிக்கிட்டாங்க.

'கூட்டத்தில நான் பேசினதில எதுவும் எனக்குத் தப்பாத் தெரியலே'—

"அப்பாவுக்கு வந்த பெருநோய் குணமானதுக்கு காணிக்கையா— அல்லது வாழ்க்கையில ஏற்பட்ட பெரிய லாபத்துக்கு காணிக்கையா— இல்லை வறுமை காரணமா— இல்ல—தங்களுக்குள்ள பக்தியின் காரணமா தங்கள் பிள்ளைகளை பெற்றோர் ஆண்டவருக்கு ஒப்படைச்சிர்றாங்க—அல்லது காதல் தோல்வி வாழ்க்கையை எதிர் நோக்கப் பயந்து— அலலது ஒரு பக்தி வெறியிலே மிக இளமையில் தாங்களே துறவு வாழ்க்கைக்கு வந்திர்றாங்க.

துறவுங்கறது— இயற்கைக்கு எதிரானது. அதில தூய்மையா வாழ முயற்சிபண்றது. ஒவ்வொரு நிமிஷமும் ஜாக்கிரதையாயிருக்கிறது— தன் உணர்வுகள்—, உடல் தேவைகளுக்கு எதிராக தனக்குள்ளேயே தொடர்ந்து போராடித் தவிச்சுக்கிட்டிருக்கிறது தான்—அல்லது மத்தவங்களுக்குத் தெரியாம தவறுகள் செய்ய முயற்சி பண்ணி சதா மனங் கொமசுக்கிட்டிருக்கிறது தான்—

துறவு மேற்கொண்டிருக்கிற கன்னியர்களை அல்லது காளையரை பார்க்கிறபோது— எனக்கு அவங்க மேல பக்தியோ—மரியாதையோதோணறதேயில்லே மாறாக அவங்களுக்காக இரக்கப்படறேன்— மனசுக்குள்ளே அழுறேன்.—"

'ஸ்ரீரெங்கபாளையம்' -பெயர்ப் பலகை. தென்னை, பலா மரங்கள் கவிழ்ந்துள்ள அழகிய பங்க-

---

## தை வந்தாள்

பண போதையில் ..
போன தையில்...
வந்து போன வரன்களுக்கான
சொஜ்ஜி, பஜ்ஜி கடன்கள்
தீரு முன்னே...
இந்தத் தை
ஏன் வருகிறது...
தை...தை என்று...!

—அரங்க கோவிந்தராசன்



படிப்பகம்

www.padippakam.com

ளாக்கள்— நவீன முறையில் கட்டப்பட்டுள்ள தியேட்டர் ஆனந்.

மதிப்பீட்டு மையம் நகரின் கிழக்குப் புறத்தில் மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மேனிலைப் பள்ளியில் நடந்தது. பள்ளி நிர்வாகமே பஸ் ஸ்டாண்டிலிருந்து பள்ளிக்கு பஸ் விட்டிருந்தது.

காலை 8.30 மணிக்கே தேர்வாளர்களைக் கொண்டு வந்து பள்ளியில் குவித்துவிடும். 9.00 மணிக்கு மேல் தான் தாள் திருத்தும் பணி தொடங்கும்.

அது வரை சுமார் முன்னூறு ஆசிரியர்களும் நூறு ஆசிரியைகளும் வேப்ப மரங்களின் அடியில் நின்றும் உட்கார்ந்தும் கூட்டம் கூட்டமாகப் பேசிக் கொண்டிருப்பாங்க.

தமிழாசிரியர்கள் என்றால் இன்றைய தமிழ்க் கவிதை, சிறுகதை, நாவல், ஆராய்ச்சி—, நயங்கள்—, போக்குகள் பற்றி யாராவது பேசுவது உண்டோ..? —ம் —கூம்!

நவீனகால மனிதர்கள் என்ற வகையில் சோவியத் பெரிஸ்த்ரோயிக்கா— கிளாஸ்நாஸ்த் பற்றியோ – கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள்— ஆப்கான் பிரச்சனை? கம்பூசியா— கியூபா — சொரிப தென் ஆப்ரிக்கா பற்றியோ பேசியதுண்டா—?

அது கூட வேண்டாம்! பஞ்சாப்— காஷ்மீர்— பாப்பர் மஜீத்—ராம ஜென்ம பூமி பற்றியாவது பேசுவதுண்டா—? அட— தமிழக அரசியல்—? தமிழ் பத்திரிக்கை? தமிழ்சினிமா?

ம்., கூம்! .. ம்.. கூம்!

எல்லாம் பணம்! பதவிதான் !

ஐந்தாவது ஊதியக்குழு முரண்பாடுகள்— உதவித் தலைமை ஆசிரியர் பதவி பற்றிய அரசு ஆணைக்குளறுபடிகள்—,தலைமை ஆசிரியர் பதவி பற்றிய புதிய அரசு ஆணை—, தாள் மதிப்பீட்டில் கிடைக்கப் போகும் பணம்— சிற்றுண்டித் தொகை—, பயணப்படி— எந்த ஊர் மார்க்கமாக வந்ததாகக் காட்டினால் அதிகம் டி.ஏ. கிடைக்கும்—, இதே பேச்சுத் தான்— மீண்டும்! மீண்டும்!

'அதுவும் ஐயா தேநீர் அருந்தச் செல்வோமா? கொட்டை வடிநீர்க் குழம்பியம் பருகலாமா?''

என்ற பாணியில்—

சத்தியமாச் சொல்லுங்க— ஒங்க பெண்டாட்டி பிள்ளைங்க கிட்ட இப்படித்தான் பேசுவீங்களா?



படிப்பகம்

www.padippakam.com

அதென்ன வீட்டுக்குள்ள ஒரு தமிழ்? வெளியில் ஒரு தமிழ்!

கணக்கு ஆசிரியர், அறிவியல் ஆசிரியர் எல்லாரும் தமிழர்கள் தான். அவங்க கூடும்போது— சுத்த கணக்கு பாஷையிலோ— தூய அறிவியல் மொழியிலேயோ உசாவிக் கொள்வதில்லையே? தமிழாசிரியர்களுக்கு மட்டும்ஏன் இந்தப் போலித்தனம்?''

“கலைமன்றம்!'' கண்டக்டர் குரல். சிலர் இறங்கினர்.

''இரண்டுநாட்கள் இந்தக் கூட்டத்தில் தரையில் தூக்கிப் போடப்பட்ட மீன் போல மூச்சு விடக்கஷ்டப்பட்டேன். மூன்றாவது நாள் இந்தப் பள்ளியின் மைதானத்தில் கிழக்கு நோக்கி நடந்தேன். கடைசியில் இதே நிர்வாகம் நடத்தும் இங்கிலீஷ் மீடியம் ஸ்கூல் இருக்கு.

அந்தப் பள்ளியின் முன்னால ரொம்ப அழகான பூந்தோட்டம் இருக்கு. அங்குள்ள விதவிதமான மலர்களின் அழகைப் பாத்துக்கிட்டே இருப்பேன்.

மணி ஒன்பதாகும் போது அழகு மிக்க மலர்க்கொத்தைப் பிடுங்கி கையிலே பிடிச்சுக்கிட்டு வந்தேன்.

மலர்கொத்தைக் கையில் பிடிச்சபடி வந்த என்னை சட்டையைக் கிழிச்சுக்கிட்டு பழைய துணி மூட்டையைத் தாங்கி வர்ற பைத்தியக்காரனைப் போல எல்லாரும் பார்த்தாங்க.

அதைக் கொண்டுக்கிட்டு என் இடத்தில் வந்து உட்கார்ந்தேன் இதை கடந்த பத்து நாளாக நீங்க பாத்தீங்க.

ஒங்களுக்கு தெரியாததை துணிச்சலாக இப்போ நான் சொல்றேன்—.

ஒவ்வொரு நாளும் இந்த ஹாலுக்குள்ள நுழையும்போது.. விட்டில் ஃப்ளவரைப் பார்ப்பேன் ‘ஹலோ ஒயிட் பேர்டு— குட் மார்னிங்’ன்னு மனசுக்குள்ள சொல்லிக்கிடுவேன்—''

எல்லோருக்கும் ஷாக். அமைதி இறுக்கமாகியது. உட்கார்ந்திருந்தவர்கள் மூக்கு வழியாக அனலும்— கண்கள் வழியாக அம்புகளும் அவன் மீது சீறிப்பாய்ந்தன.

''என் இடத்தில் போய் ஒக்காந்த பின்— விட்டில் ஃப்ளவரைப் பார்த்து— “லவ்லி ஒயிட் பேர்டு— தில் இஸ் ஃபார்யூன்னு சொல்லிக்கிட்டே என் மேஜை மீது அதுதவமிருக்கும். மறுநாள் புதிய மலர்க்கொத்துஅந்த இடத்தில்— இப்படி கடந்த பத்து நாட்கள்—''



படிப்பகம்

www.padippakam.com

பஸ் நின்றது. 'காந்தி சிலை!' கூட்டம் ரொம்ப எறங்கிருச்சு. முன்னாலே மேலேயுள்ள கம்பியைப் பிடிச்சபடி லிட்டில் ஃப்ளவர் நின்னுக்கிட்டிருந்தாள்.

இவனை திரும்பிப் பார்த்தாள். 'லவ்லி ஒயிட் பேர்டு— என் அன்பைச் சொல்லி ஒன்னக் காயப்படுத்திட்டேனா?'— மனசுக்குள்.

அவள் முகத்தில் இதழ்களில்— கண்களில்— புதிய ஒளி.

முன்பக்கமாகத் திரும்பி நின்னுக்கிட்டாள். பஸ் குலுங்காமல் மிதமான வேகத்தில் ஓடிச்சு.

தர்ம சத்திரத்திற்கு முன்னால பஸ் நின்னது. இறங்கினார். முருகேசன் இறங்கறதுக்காகபஸ்ஸுக்குள்ள நடந்துகிட்டிருக்கும்போது

---

# மு. கு. ஜகந்நாதராஜா

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் இந்தி, சமஸ்கிருதம் பிராகிருதம், பாலி ஆகிய பத்துக்கும் மேற்பட்ட மொழிகளில் புலமையும் கவிதை எழுதும் ஆற்றலும் பெற்றவர். தமிழிலிருந்து பிற மொழிகளுக்கும் அந்த மொழிகளிலிருந்து தமிழுக்கும் பண்டைய சிறந்த இலக்கிய, தத்துவ நூல்களை மொழிபெயர்த்து தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழி வகுப்பவர். சுயமாகக் கற்றவர். பள்ளிக் கல்வி ஆறாம் வகுப்பு மட்டுமே. ராஜபாளையத்தில் சாதாரண தொழிலாளர்களையும் இலக்கியவாதிகளாக உருவாக்கியவர். மணிமேகலை மன்றம் என்ற இலக்கிய அமைப்பை நிறுவி 33 ஆண்டுளாக தலைவராக பணியாற்றி வருபவர். க.இ. பெருமன்றத்தின் காமராசர் மாவட்டக் குழுவின் முதல் தலைவராக இருந்தவர். மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாடெமியின் முதல் விருதினை, ஆண்டாளின் வரலாற்றை கிருஷ்ணதேவராயர் எழுதிய 'ஆமுக்த மால்யதா' என்ற நூலுக்காகப் பெற்றவர். தஞ்சாவூர், ஹைதராபாத், கர்னாடகா பல்கலைக் கழகங்களில் ஆய்வுகள் செய்தவர். இவரது இல்லத்தில் அனைத்து மொழி நூல்கள் அடங்கிய நூலகம் உள்ளது.

கொ. மா கோதண்டம்

---



படிப்பகம்

www.padippakam.com

கீழே விட்டில் ஃப்ளவர் இவனை எதிர் பார்த்துக்கிட்டிருப்பதை பார்த்தான்.

பஸ் போயிருச்சு.

அவள் கண்களில் தோன்றிய புது மலர்ச்சிகள் முகத்தில் பரவியது— இதழ்களில் நகையூர்ந்தது—

"ஓங்க பேச்சு நல்லாயிருந்தது—!"

இவனுக்கு உள்ளங்காலிலிருந்து உச்சந் தலை வரை சில்லென்றது— 'பேச்சு நல்லாயிருந்தது— ஆனா ஒங்களுக்கு பிடிச்சதா?' இவன் மனசுக்குள்.

"எனக்கு ரொம்ப பிடிச்சிருந்தது!"

இவனுக்குள் கிளர்ச்சி. பேச வார்த்தைகள் கிடைக்கல. நாக்கில் பசை போட்டு இறுகலாக ஒட்டிட்ட மாதிரி இருந்துச்சு— நன்றின்னு சொல்லறதுக்கு முடியல.

"....  ...."

"மனுஷங்க மேலே ப்ரியமா இருக்றதவிட சந்தோஷம் வேற எதுல இருக்கு—?" — சிவப்பு சோல்னா பை அவள் தோளில் ஆட அந்த தேவதை குலுங்காமல் முன்னால் போய்க்கிட்டிருந்தாள்...

# யார் சொன்னது ?

யார் சொன்னது ?
ஆண்டாள் தேர்
வடம் நீளம் என்று,
நம்பமாட்டேன்.
உன் கருங்கூந்தல்
ஜடையை விடவா
அது நீளம்..?

# இது பாரதம்

நெற்றி வியர்வை
நிலத்தில் சித்த
கயிறு இழுத்தேன்—
கைத்தறியில் துணி நெய்ய
கால் வயிறு கூட
நிரம்பவில்லை !
சம்போ.. மகாதேவாவென
சங்கீத சப்ளாக் கட்டை
தட்டினேன்..
பாயாசமும் பொங்கலும்
கிடைத்தது..
அப்பாடா ..

எஸ்.எஸ்.மணியம்



படிப்பகம்

www.padippakam.com

# கருவிழிகள் கைவிரலால் புண்ணாகும்

போரின்றி உலகினிலே அமைதியாய் வாழ்வதற்கு
தோள் கொடுப்பாய் மனிதா . . . .நீ
விழித்திருப்பாய் மனிதா . . . .
குரல் கொடுப்பாய் மனிதா . . . (போரின்றி)

குருதிப் புழுதியிலே விழுந்துயிர் போன பின்பு
குவலயம் ஆளயெண்ணின் பயனேதையா . . .
ஆளயெண்ணின் பயனேதையா . . ,
விழி துயில் வேளையிலும் பழி நேரலாம்—சிறு
வினையாலும் மழலைகளும் சருகாகலாம் . . .
(இந்த போரின்றி)

அணுவெடி போரினிலே புவிமிஞ்சுமோ!... அதை
செய்ததனி உயிரும் பின்கடை மிஞ்சுமோ !
கண்ணிமைக்கும் வேளையிலும் கதிமாறிடும்,...நம்
கருவிழிகள் கைவிரலால் புண்ணாகிடும்...
(இந்த போரின்றி)

–சத்திரப்பட்டி ஜீவநாதம்

படிப்பகம்

www.padippakam.com

# அமரர் ராஜம்மியில்

இவர் ஒரு மனிதர். இவர் ஒரு நல்லாசிரியர். கையில் காசிருக்கும் வரை ஏழ்மைக்காக கொடுப்பார் என்பதைவிட கடன் வாங்கியும் கொடுப்பார். அப்படிப்பட்ட 'பித்த' மனிதர். கல்வி பெறாத ஏழைகளுக்காக வருந்துவார். இவரிடம் கற்கும் மாணவர்களுள் வறிய நிலையில் உள்ளவர்களையும் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட — தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களையும் இனங்கண்டு, இனிய சொற்கள் கூறி படிக்க வைப்பார். பள்ளியில் மட்டுமல்லாமல் தனியாகவும் சம்பளம் பெறாத டியூஷன் நடத்தி ஊக்கமளிப்பார். சனி, ஞாயிறு கிழமைகளில் அந்த மாணவர்களை வீட்டிற்கு அழைத்து வந்து சாப்பாடும் போட்டு பாடம் கற்பிப்பார். பொது வாழ்வில் ஈடுபட்டு உழைப்பவர்களுள் யாராவது இவரது உதவியை நாடிவந்தால் காசு கொடுப்பதும் அல்லாமல் அவர்களுடைய பொதுக் கல்வித் தகுதியை வளர்த்துக் கொள்ள ஆலோசனைகள் கூறுவார். அதற்காகத் தன்னிடம் வருவதாக இருந்தால் உதவியும் செய்வார். இவர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றும் போதே காலதேவனால் வலிந்து அழைத்துக் கொள்ளப்பட்டார்.

இவர் ஒரு முற்போக்கு சிந்தனையாளர் அரசியல் பற்றுள்ளவரும் கூட. இவரால் புகழப்பட்ட அரசியல் மேதைகள் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், மகாத்மா காந்தி. இவரால் புகழப்பட்ட இலக்கிய மேதைகள் ஷெல்லி, பைரன், வேர்ட்ஸ்வொர்த், சேக்ஸ்பியர், டால்ஸ்டாய், கவிக்குயில் சரோஜினி தேவி, பாரதி, தாகூர்.

—ஏ. எம். சாமி

படிப்பகம்

www.padippakam.com

# வக்கீல்

1. பாவேந்தன் பாட லென்றால்
பைந்தமிழ் கொலுவி ருக்கும் !
சாவேந்தும் மனிதர் கூட
சடுதியில் உயிர்த்து நிற்பார்!
பூவேந்தும் பூவை யர்க்கோ
புதுக்கருத்தை புதுக்கி வைத்தார்!
மூவேந்தர் திறன்களெல்லாம்
முழுதுமாய் தோற்றம் காட்டும் !

2. தொழிலாளர் உரிமை தன்னை
திட்டமாக எடுத்து ரைத்தார் !
பழி கொண்ட உளம் படைத்தோர்
பெண்மையை அடக்கி வைத்த
இழி செயலைத் தூர்த்தெ றிந்தார் !
இன் தமிழைக்காத்து வந்தார் !
விழி நீரில் குளித்த கைம்மை
வனிதையர்க்கோ வக்கீலானார் !

அ. இராசகோபால்



படிப்பகம்

www.padippakam.com



வில்லிசை மேதை அமரர் சாத்தூர் பிச்சைக் குட்டி வழியில், 'முத்தமிழ்ச் செல்வி' காந்திமதி-ஈஸ்வரி வில்லிசைக்குழு (இவ்வாண்டு நமது மாநிலக்குழு அளித்த கேடயத்தைப் பெற்றவர்) சிவகாசியிலும், என். சீனிவாசன் ஆர்.பத்மாவதி, பூவலிங்கம்—மீனாட்சி ஆகிய குழுக்கள் சின்னக்காமன் பட்டியிலும், சர்க்கரை ஆசாரி குழு கோடங்கி பட்டியிலும், வேலுத்தாய் குழு கரிசல் குனத்திலும், பாலு திராவிடன் குழு மம்சா புரத்திலும், ஷண்முகம் குழு பந்தல் குடியிலும், இயங்கி இக்கலையை செழுமைப் படுத்தி வருகின்றனர்.

ஒயிற்கும்மியாட்டம் என்ற நாட்டுப்புறக் கலைக் குழுக்கள், சின்னக்காமன் பட்டி (மகாலிங்கம், குருசாமி), கத்தாளம் பட்டி (மூக்கையா), மற்றும் சிவகாசி, விருதுநகர் முதலான ஊர்களில் சிறப்புடன் பணி புரிகின்றனர்.

தேவராட்டம் என்ற மற்றொரு நாட்டுப்புறக்கலை பெத்திலு பட்டி (எஸ்.சோலைச்சாமி), அனுப்பன்குளம், ஆண்டியாபுரம், க. பாறைப்பட்டி, கோதை நாச்சியாபுரம், நிறைமதி, சூரங்குடி முதலான ஊர்களில் செழித்து வளர்கிறது.

நையாண்டிமேளம் என்ற பிறிதொரு நாட்டுப்புறக்கலை சிவகாசி, வெங்கிடாசலபுரம் முதலான ஊர்களில் முத்திரை பதித்துள்ளன.

'காமராஜர் மாவட்டக் கிராமிய கலைகள் சங்கம்' என்ற அமைப்பும் இயங்கி வருகிறது.

—செ. ஞானன்

(காமராஜர் மாவட்டக் கிராமியக் கலை சங்கத்தின் ஆலோசகர்)

## கொ.மா.கோதண்டம்

பஞ்சாலைத் தொழிலாளியாக 31 ஆண்டுகள் பணியாற்றிய இவர் தற்போது நூலகத்தில் பணி செய்து வருகிறார். மலைபடு வாழ்க்கையை பிரதானமாக வைத்து நாவல்கள் சிறு கதைகள், சிறுவர் இலக்கியம் கவிதைகள் படைத்து வருபவர். ஆரண்ய காண்டம் நூலுக்கு மத்திய அரசின் பரிசு பெற்றவர் குழந்தை எழுத்தாளர் சங்க தங்கப்பதக்கம் பரிசு பெற்றவர். இவரது ஐந்து நூல்கள் எம்.ஏ. விற்கு பாட நூலாக தெரிவு செய்யப்பட்டவை. தற்போது ராஜபாளையம் க.இ.பெ.மன்ற தலைவராக உள்ளார். இக்கிளையிலிருந்து இளைய படைப்பாளிகளை ஒன்று திரட்டி 'புதிய புறாக்கள் என்ற கவிதை நூலையும், 'புதிய முகில்கள்' என்ற சிறுகதை நூலையும் தொகுத்து வெளியிட்டுள்ளார். மணிமேகலை மன்றத்தின் பொதுச் செயலர். இவரது படைப்புக்களை சோவியத் தமிழறிஞர் விதாலி பூர்ணிகா உருசிய மொழியில் மொழிபெயர்த்துள்ளார். ஆங்கிலம், ஜெர்மனி, இந்தி, தெலுங்கு, சிங்களம் போன்ற மொழிகளிலும் இவரது படைப்புகள் மொழி ஆக்கம் செய்யப்பட்டுள்ளன, 23 வருட தாமரை இலக்கிய இதழ்களை தொகுத்து வைத்திருக்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com

# காவல்

எம். சேகர்

"அப்ப நான் போயிட்டு வரேன் முதலாளி, இனிமே தாங்காது" வார்த்தைகளை விசிறிய ஏட்டு சுந்தரத்தின் வாய் சற்று கோணலாக சிரித்தது.

அவர் எழுந்திருக்க முயற்சி செய்தார். உள்ளே போன கோவா ஸ்பெஷல் சரக்கு மீன் துண்டங்களுடனும், கோழிக்கறி வறுவலுடனும் ஒரு கூட்டணி அமைத்து மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் தடுமாறவைத்தது.

முதலாளி தர்மராஜ் அருகே அமர்ந்து சுதி ஏற்றி சொர்க்கம் கண்டவர்கள், நிதானம் இழந்து சோபாவிலேயே சாய்ந்து கிடந்தனர்.

முழுக்கவும் நிதானம் இழக்காத தர்மராஜ் முதலாளி, "அப்ப ஏட்டு சார் போயிட்டு வாங்க" என்றார் திக்கித்திணறி.

பட்டுக்கம்பளம் விரித்திருந்த அந்தப் பெரிய மாடி அறையிலிருந்து ஏட்டு சுந்தரம் கழைக்கூத்தாடி கம்பியில் நடந்தது போல மெதுவாய், தடுமாறி, தடுமாறி, சாலைக்குஇறங்கி வந்தார்.

"இந்த எழவு தெருவுல டூட்டி போட்டுதொலைச்சிட்டாங்களே! பஜாரில் போட்டிருந்தால் ஏதோ செலவுக்கு பாத்திருக்கலாம் .........நம்மோட வந்தவனுக எங்கே போய்த் தொலைஞ்சானுங்களோ.........ம்......"

தன்னுணர்வு வரத் தொடங்கியதும் வயிற்றைப் பசி கிள்ளியது புரிந்தது. உள்ளே போன சரக்கு நல்ல சரக்குதான் நல்லாவே வேலை செய்யுது .....

'ஒரு புரோட்டா வருவல்அடிச்சா கிச்சின்று இருக்கும். ம்...'

ஆவலோடு பாக்கெட்டைத் தடவினார் ஏட்டு. பைக்குள் ஏதோ சில்லரைத்தான் தட்டுப் பட்டது.

'இதவச்சு என்ன செய்ய? டீதான் குடிக்கலாம்' ஏட்டு சிந்தனை செய்தவாறே நடந்து கொண்டிருந்தார். அவரின் கண்கள் இருட்டைத் துளாவ ஆரம்பித்தது.

ஸன்னமாய் முனகல் சத்தம் ...ஏட்டுக்கு நம்பிக்கைத் துளிர்...!

இன்னும் சில எட்டுக்கள் வைத்து காதைக் கூர்மைப் படுத்தினார். ஒரு மனுசனின்



படிப்பகம்

www.padippakam.com

With Best Compliments :

★

RAVI Artist

21, West Car Street,

SIVAKASI-626123

Phone : 20344

புலம்பல்— அதுவும் 'தண்ணி' அடிச்ச மனுஷப் புலம்பல்.

"அப்பாடி......!" ஏட்டு வாயில் புன்னகை. ஒரு கடைப் பலகையில் சுருண்டு படுத்திருந்த அவன் அருகே சென்று "ஏய்! யார்டா நீ? என்ன செய்துகிட்டு இருக்கே? கடையில் கன்னம் போட்டுகிட்டிருக்கியா?" உறுமினார்.

படுத்திருந்தவன் பரப்பிரம்மமாய்... வார்த்தை ஏதும் இல்லாமல்...

ஏட்டுக்கு அவனின் மௌனம் அவமானத்தை வார்த்தது. "டேய், நாய்ப்பயலே, கேக்கிறேனில்ல... காதிலே விழலே" வாய் வேலை செய்யும் போதே கால் அவனின் தொடைப் பகுதியில் ஒரு 'போலிஸ்' உதை கொடுத்தது. அதை வாங்கிய பின்னரே அவனுக்கும் பிரஞ்ஞை தட்டியது.

"எவண்டா அது? என்னை அடிக்கிறது" உளறிக் கொண்டே எழுந்திருக்க முயற்சி செய்தான், படுத்திருந்தவன்.

"எவண்டாவா?" தன்னை ஒரு சாதாரணப் பயல் கேக்கிறதா? எவ்வளவு பெரிய அவமானம்? ஏட்டு கையிலிருந்த பிரம்பு அவன் மீது விளையாட ஆரம்பித்தது.

எழுந்திருக்க முயன்று, தத்தித் தடுமாறி நிற்க மேலும் எத்தனிக்கும் போது மேலும்வி ழுந்த லத்திக்கம்படி அவனை நிலைகுலைய வைத்து மீண்டும் விழவே வைத்தது. ஒருவாறு எழுந்து நின்றான்.

"ஏண்டா பண்ணிப்பயலே, என்னையா எவண்டாங்கிற?" கன்னங்களில் கைவிரல் ரேகை பதிப்பித்தன.

அவனுக்கு முழு நிதானமும் வந்தது" "சாமி! நீங்களா? நீங்கன்னு தெரியாம பேசிட்டேன்...



படிப்பகம்

www.padippakam.com

ஐயோ அடிக்காதீங்க சாமி''. என்று கும்பிட்டான்.

''இங்க எதுக்கடா படுத்திருக்க''

''சும்மா தான் சாமி''

''சும்மா என்னடா சும்மா.. கழுதைக்குப் பிறந்த பயலே, பூட்டை உடைக்கத்தானே?''

''ஐய்யய்யோ நான் அப்படிப் பட்டவனில்லை சாமி''?

''குடிச்சிருக்கயாடா''

''இல்லை சாமி... குடிக்கலை சாமி''

''ஏண்டா பொய் சொல்ற! ஊதுடா வாயை'' கையை ஓங்கினார்.

''ஆமா சாமி, கொஞ்சம் குடிச்சிட்டேன் சாமி.''

''யாருடா நீ, ஏதுக்குடா குடிச்சே''

''சாமி நான், இந்த லாரி செட்டுல வேலை பார்க்கிறவன் சாமி, பன்னிரெண்டு மணி வரைக்கும் லோடு இறக்கினோம், ரொம்ப அலுப்பா இருந்திச்சி. வீட்டுக்கும் போக வசதியில்லை. கொஞ்சம் போட்டுட்டேன். எப்படியோ இங்க படுத்திட்டேன்''...

''ஓ...கோ... அப்ப டி ...யா? இளக்காரமாக ஒலித்தது ஏட்டின் குரல் ''ஐயா கிட்ட வா'' அவன் கையை கெட்டியாகப் பிடித்து இழுத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினார்.

''சாமி நான் புள்ள குட்டிக் காரன் சாமி என்ன விட்டுடுங்க''

''ஒங்களையெல்லாம் கேஸ் போட்டு இழுத்தடிச்சாதான் புத்தி வரும்டா''

''ஐய்யய்யோ அப்படி செஞ்

## சிவகாசியில் வார முரசு

சிவகாசியில் காமராஜர் மாவட்ட அளவிலான செய்தி இதழாக கடந்த 1984ம் ஆண்டு வாரமுரசு தொடங்கப்பட்டது. இளம் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு முன்னுரிமை தரும் சிறு இலக்கிய இதழாக தொடர்ந்து வெளிவருகிறது இதன் ஆசிரியரான அ. ராஜா சொர்ணசேகர் தமிழ் சிற்றிதழ்கள் சங்கத்தின் (தாஸ்னா) மாநிலப் பொருளாளராகச் செயல்பட்டு வருகிறார். சிவகாசியில் இருந்து வெளியாகும் ஒரே வார இதழ் இது என்பது குறிப்பிடத் தக்கது.

சிவகாசியிலிருந்து 'ரத்ன பாலா' என்ற சிறுவர் மாத இதழ் வெளிவருகிறது.



படிப்பகம்

www.padippakam.com

சிடாதீங்க சாமி. எங்களுக்குத் தாங்காது ...அன்னன்னைக்கு கூலி வாங்கி கஞ்சி குடிக்கிற வங்க .....'' பரிதாபமாய்க் கெஞ்சினார்.

கொஞ்சம் யோசிப்பது போல் பாவனை செய்தார் ஏட்டு.

''சரி......! நீ எவ்வளவு வச்சிருக்க?''

அவன் தலையை சொறிந்து கொண்டு நடுங்கும் கையால் மடியை அவிழ்த்து, ''இந்தாங்க சாமி, இவ்வளவு தான் எப்படியாவது காப்பாத்துங்க ..'' என்று தன்னுடைய ஏகபோக சொத்தான கசங்கிய பத்துருபாயை நீட்டினான்.

உதட்டை பிதுக்கிய ஏட்டு, அவன் மடியை உற்றுப்பார்த்தார். சில பீடிகளும் கொஞ்சம் சில்லரைகளும்......

''வேற வழி இல்ல''.......

நோட்டை வாங்கிக் கொண்ட ஏட்டு, ''ஏண்டா பஞ்சப் பாட்டுப்பாடற பயலா இருக்கே சரி....சரி... புள்ள குட்டிக்காரன்னு வேறே சொல்லுற, போய்த் தொலை. ஒழுங்கா வீட்டுக்கு போ''

பத்து ரூபாயை காக்கிப்பையில் திணித்துக் கொண்ட ஏட்டு மென்மையாகச் சீட்டியடித்தார். தூரத்தில் தெரிந்த நைட் புரோட்டாக் கடை விளக்கு, அவரைப் பார்த்துக்கண் சிமிட்டியது........

## விழுப்புண் ஏந்தியவீரக்கொடி

1932ல் ராஜபாளையத்தில் 300 தடவைகள் இளைஞர்கள் கொடிகளை நடுவதும் போலீசார் அகற்றுவதும் நடந்தது. ஊரின் கிழக்கே சஞ்சீவி மலை என்ற ஒரு குன்று உள்ளது' உச்சியில் ராமக்கல் என்னும் 200 அடி உயரமுடைய மிகப்பெரிய உருட்டுப் பாறை ஒன்று இருக்கிறது. அதில் மனிதர்கள் ஏற இயலாது. நகரின் சில தீவிர போராட்ட இளைஞர்கள் ஒன்று சேர்ந்து எப்படியோ அதன் உச்சியில் ஏறி மிகப்பெரிய கொடியை கட்டிவிட்டனர். காலையில் ஊரெல்லாம் கண்டு அதிசயித்தது. போலீசார் வந்தனர். கொடியை இறக்க முடியவில்லை. விசேட காவல் படையினர் 60 பேர் வரவழைக்கப்பட்டனர். அவர்களாலும் பாறையில் ஏறமுடியவில்லை. இறுதியில் பாறையைச் சுற்றி கீழே நின்று கொண்டு கொடியைப் பார்த்து துப்பாக்கியால் சுட்டனர். அசையும் கொடியில் சில துவாரங்கள் விழுந்தது. நீண்ட நாட்கள் வீரத்தினை பறைசாற்றிக் கொண்டு அந்தக் குன்றின் மீது கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது.

கொ. மா. கோதண்டம்



படிப்பகம்

www.padippakam.com

# கலைமகளா?
# இவள் விலை மகளா?

சி. விநாயகமூர்த்தி

காசு கொடுத்தால் தான் கதவுகளைத் திறக்கின்ற
வேசி விடுதியென மாறியதே பள்ளிகளும்,

சீமானின் வரிபாக்கி கோடிக்கும் மேலிருக்க
சாமான்ய விவசாயி செலுத்தாத வரிக்காக
வீடும் பறிகொடுத்து வீதியிலே நிற்கையிலே
ஏடு படிப்பதற்கு ஏழைக்கு வழியேது?

கலைமகளைத் தரிசிக்கும் காலம் வர வேண்டுமெனில்
இலவசமாய்க் கல்வியினை எல்லோரும் பெற வேண்டும்.
''கற்றோர் கண்ணுடையார்'' கூறுகிறார் வள்ளுவனார்.
கற்றோர் வேலையின்றி காரிருளில் தவிக்கின்றார்.

கூலி உயர்வுக்கு கொடியேந்தும் தோழர்களை
காலித் தனமென்று கைது செய்யும் சட்டங்கள்
பள்ளித் தலமனைத்தும் வியாபாரம் நடக்கையிலே
கல்வித் தலைமகளைக் காப்பாற்ற வரவில்லை

வெள்ளையனை விட்டு விடுபட்ட சுதந்திரப் பெண்
கொள்ளையர்கள் வீட்டில் கொத்தடிமை யானதனால்
வரனும் விலையேற வளர்கல்வி விலையேற
தரகர்வழியாக சகலவிலை யேறுவதால்
கல்லா மூடஜனம் கல்லாகி விட்டதனால்
எல்லோரும் கல்வியினை எட்டுவது எக்காலம்?



படிப்பகம்

www.padippakam.com

With best Compliments from:

M. L. No. 173
R. C. No. 913821
C. S. T. 488995

Phone : 2915
Grams: "BABY"

K. RAMAKRIHNAN & SONS

Mfrs: BABY BRAND SURGICAL GAUZE & BANDAGE

9/120A Sankarapandiapuram Road,
CHATRAPATTI-626 102.
(Via) Rajapalayam.
Tamil Nadu.

# இலக்கிய இரட்டையர்

'வறுமைச் சக்கரம்' என்ற முத்திரைக் கதையை ஆனந்த விகடனில் எழுதியதன் மூலம் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர் அழ. கிருஷ்ணமூர்த்தி. சோசலிச எதார்த்தவாத முன்னோடிச் சிறுகதை எழுத்தாளர்களில் இவரும் ஒருவர். வானம் பார்த்த கரிசல் பூமி மக்களின் வாழ்வை நெஞ்சைத் தொடும் ஓவியங்களாகப் படைத்துள்ளவர். 'வறுமைச் சக்கரம்' இவரது சிறுகதைத் தொகுதி. 'பாடுபாப்பா' என்ற குழந்தைப் பாடல் தொகுப்பும், 'சோவியத் குழந்தைப் பாடல்கள்' என்ற மொழி பெயர்ப்பு நூலும் எழுதியுள்ளார்.

அழ. கிருஷ்ணமூர்த்தியின் உடன்பிறந்த சகோதரர் 'ராஜ் கமல்' அவர்களும் ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளர் ஆவார். ஆனந்தவிகடன், குங்குமம், தாய், தாமரை, செம்மலர் போன்ற இதழ்களில் நிறைய சிறுகதைகளும் குழந்தைகளுக்கான நாவலும் எழுதியுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com


With Best Compliments from :

# Standard Fireworks Limited

Post Box No. 299,
SIVAKASI-626 123.
Phone : *23866* (4 Lines)
Telegrams : "REDFORT"
Telex : *0448-214* FORT IN



Phone ; Office : *22340*
Res: *21889*

# K. K. Traders Private Ltd.,

Whole Sale Dealer
The Andhra Pradesh Paper Mill Ltd.,

Office :
41, Thiruthangal Road,
SIVAKASI-626 123.
(Tamilnadu)

Regd. Office:
2, India Exchange Place,
CALCUTTA-700 001.




படிப்பகம்

www.padippakam.com

# அமரர் திரு. P.K.V. இராஜமயில் நினைவு அறக்கட்டளை

## சத்திரப்பட்டி 626 102. (வழி) இராஜபாளையம்



எங்கள் அறக்கட்டளை 6-3-88ல் ஆரம்பிக்கப்பட்டது.

போஷக உறுப்பினர்கள் 16.
ஆயுள் உறுப்பினர்கள் 111.

போஷகர் கட்டணம் ரூ. 1000/-
ஆயுள் உறுப்பினர் கட்டணம் ரூ. 100.

இதுவரை சேர்ந்துள்ள பங்கு மூலதனம் ரூ. 27,000/-

பங்கு மூலதனத்தின் வட்டித் தொகையிலிருந்து பத்தாம் வகுப்பு மற்றும் +2 தேர்வில் முதல் இரண்டு மாணவர்களுக்கு அவர்கள் வாங்கிய மதிப்பெண் அடிப்படையில் பரிசுகள் வழங்கி வருகிறோம். இலவச பல்மருத்துவமுகாம் நடத்தினோம். மேலும் பல பணிகள் செய்ய தொடர்ந்து உறுப்பினர்கள் சேர்த்துவருகிறோம்.

இந்தியா முழுவதிலுமிருந்து ஜாதி மத வேறுபாடு இன்றி உறுப்பினர்கள் சேரலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:—

**A. யோகராஜ் B. E.**
(தலைவர்)
இராஜமயில் அறக்கட்டளை
சத்திரப்பட்டி 626 102



படிப்பகம்

www.padippakam.com

# நம் கலை இலக்கிய பெருமன்றத் திருமணம்

இரா. இரகுபதி

'சார், என் கல்யாணத்தைக் கூட இப்படித்தான் செய்யப் போறேன் ... நீங்கத்தான் சார் உதவி செய்யணும்' என்று தொலை பேசி இலாகாவில் பணியாற்றும் ஒரு இளைஞர் மிக ஆர்வமாக என்னிடம் வந்து கேட்டார்.

அவருடைய கண்களில் மின்னிய ஆர்வம், ஆசை என்னை மகிழ்ச்சி கொள்ளச் செய்தது. "தம்பி நீங்க....கேட்டா போதாதா ....நான் மட்டுமில்லை ..கலை இலக்கியப் பெருமன்றமே அங்கே நிக்கும்...கவலைப் படாதிங்க .." என்றேன்.

'சார்...கல்யாண ஏற்பாடு ரொம்ப அருமை....கல்யாண மென்னா.. இப்படித்தான் இருக்கனும்'' கம்பர் கோவில் கிழக்கு பகுதியைச் சார்ந்த பெரியவர் வீர முத்துசாமி பாராட்டு தெரி வித்தார்.

இப்படி ஒரு சேர அனைவரையும் ஈர்த்த திருமணம் எது?

அதுதிருச்சி நகர கலை இலக்கியப் பெருமன்றச் செயலர் மா. பாலகிருஷ்ணன் - பால சஞ்சீவியின் திருமணம் தான் அது.

"பண்பாட்டுப் புரட்சியை நடத்த வேண்டிய நாம் இந்தத் திருமண விழாவையும் முற்போக்கான முறையில் வடிவமைப்பது முக்கியமானது'' 'என்ற கருத்தை தோழர் பாலகிருஷ்ணன்— சஞ்சீவி திருமணத்தில் நடைமுறைப்படுத்தினோம்.

திருமணவிழாவிற்கு முன்னாள் மாவட்டத் தலைவர் புலவர் சிவலிங்கம் தோழர்கள் வீரமணி, குமரப்பன், மனோகரன், பால் சாமி, மோகன், ஜீவன் தோழியர்கள் சாந்தி, இரமா, இராணி மணமகன் பாலகிருஷ்ணன் ஆகியோரிடம் விழாவின் நிகழ் நிரலை அமைத்து விவாதம் நடத்தினோம்.

'பொன்னீலன் அண்ணாச்சி வாறாரு அவரிடம் காட்டி செழு மைப் படுத்திக் கொள்ளலாம் என்று முடிவு செய்தோம்.



படிப்பகம்

www.padippakam.com

திருமணத்திற்கு முதல் நாள் இரவு 8 மணிக்கே அண்ணாச்சி வந்து விட்டார். அவரிடம் விவாதித்தபோது மிக குறிப்பாக பல சீர்திருத்த திருமணங்களில் பெற்றோர்களுக்கு முக்கியம் தருவதில்லை. பெற்று வளர்த்து ஆளாக்கி தம் பிள்ளைகளுக்கு திருமணம் செய்கின்ற அவர்களுக்கு பெருமை தரும் வண்ணம் அமைதல் வேண்டும் என்றார். அதுமட்டுமின்றி அவர்கள் பகுதியில் செய்யும் மூடநம்பிக்கை இல்லாத சடங்குகளைக் கூட இதில் சேர்க்கலாம் என்றார்.

இதனால் அன்று மணமகளுடையே இரு குடும்பத்தைச் சார்ந்த பெற்றோர்கள், உறவினர்களிடம் இரவு 12 மணிவரை கலந்து ஆலோசித்தோம்.

அதன்படி திருமண நிகழ்ச்சிகளின் 'நிகழ் நிரல் தயாரித்து அதையே நடைமுறைப்படுத்தினோம்.

## மணமேடை அமைப்பு

பின்புறத்தில் நீலத் தரையில் பாலகிருஷ்ணன் பாலசஞ்சீவி திருமணம் என்ற வாசகம், நடுமையத்தில் கம்பீரமான மணமக்களின் இருக்கை. இருபக்கமும் மணமக்களின் பெற்றோர் அமர இருக்கைகள் மணவிழாத் தலைவர் முன்னிலை வகிப்போர் இருக்கைகள். மேடைக்கு முன்னால் மூன்று குத்துவிளக்குகள் என்றவாறு அமைத்திருந்தோம்.

## மணவிழா நிகழ் நிரல் வரிசை

1. மங்கள இசை
2. விழாத் தலைவர் மணவிழா தொடங்குகிறது என அறிவித்தல்.
3. மணமக்களை மேடைக்கு அழைத்து வருதல்.
4. பெற்றோர் உறவினர் சிறப்பும் அறிமுகமும்.
5. மணமக்கள் உறுதி மொழி.

(தலைவர் சொல்ல மணமக்கள் திரும்பச் சொல்ல வேண்டும்

மணமகன்: சீத்தாராம பட்டிணம் மாணிக்கம் செல்லம்மாள் மகன் பால கிருஷ்ணனாகிய நான்.



படிப்பகம்

www.padippakam.com

மணமகள்: பட்டினம் வேலாயுதம் பிச்சாயி முத்துவல்லி மகள் பாலசஞ்சீவியாகிய நான்.

இருவரும் இணைந்து: மணமக்களாகிய இன்றுதொட்டு ஒருவரை ஒருவர் நேசித்தும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தும் இன்ப துன்பங்களில் இருவரும் சமமாக பங்கு கொண்டும் வரதட்சணை சிக்கல்கள் ஏதுமின்றி வளமான வாழ்வை அமைத்துக் கொண்டும், விருந்தினர்களை உபசரித்தும் இல்லப் பணிகளோடு நாட்டுத் தொண்டு செய்தும் 'நல்லதோர் குடும்பம், ஒரு பல்கலைக் கழகம்' என இல்லறத்தை அமைத்து வாழ்வோம் என உங்கள் முன் உறுதி கூறுகின்றோம்.

6. மணமக்கள் பெற்றோரிடம் ஆசி பெறுதல்.
7. மங்கல நாணை அனைவரும் அனுப்பி ஆசி பெறுதல் அட்சதை வழங்கல்
8. கையடை (மணமக்களுடைய பெற்றோர் மணமக்களை கைபிடித்து ஒப்படைத்தல் )
9. பெற்றோர் மங்கல நாணை எடுத்துத் தர தலைவர் மணமக்களுக்கு அளித்தல்.
10. கெட்டி மேளம் கொட்ட மங்கள நாணை பூட்டும் நிகழ்ச்சி
11. நலுங்கு என்ற மணமிடுதல்.
12. குழந்தைகள் வாழ்த்து.
13. மணமக்களை வாழ்த்திப் பாடுதல். (இரண்டு)
14. தலைவர் வாழ்த்து
15. தோழர்கள் வாழ்த்துகக்ள் & வாழ்த்து மடல்கள்.
16. பரிசுகள் வழங்குதல்.
17. கலை நிகழ்ச்சிகள்
18. மண மக்கள் நன்றி
19. மணவிருந்து

இந்நிகழ் நிரலின் தலைப்புகளின் படியே இத்திருமணத்தை நடத்தினோம். இதில் மணமக்களிடம் இத்திருமணத்திற்கு சம்



படிப்பகம்

www.padippakam.com

மதமா? என்ற இசைவு பெறும் நிகழ்ச்சியை நம் மாநிலச் செயலர் அமைக்கச் சொன்னார். ஒரு மாதத்திற்கு முன் மணஉறுதி விழா நடத்தியதால் அதை இதில் சேர்க்கவில்லை. அதையும் இதில் சேர்த்துக் கொள்ளலாம்.

தொழிற் சங்கத் தலைவர் தோழர் ஜெகன் தலைமையேற்க, நம் மாநில செயலர் பொன்னீலன் முன்னிலை வகிக்க நடந்த தோழர் பாலகிருஷ்ணன் —பாலசஞ்சீவி திருமணமே நம் மாநிலத்திலேயே முதன் முதலில் நடந்த கலை இலக்கியப் பெருமன்றத் திருமணம் ஆகும்.

இத் திருமணத்தைப் பற்றிச் சொல்லும்போது புதுகை மாவட்டச் செயலர் மிகச் சிறப்பாக இருந்தது. இன்னும் கலகலப் பாக்க வேண்டும் என்றார்.

உண்மைதான் மணக்களை கொஞ்சம் கலாட்டா செய்ய லாம். மகிழ்ச்சி பொங்கும் கலை நிகழ்ச்சிகளை கொஞ்சம் முன்னதாகவே தயாரித்து வழங்கலாம்.

புதிதாக சில வேடிக்கையான, மகிழ்ச்சியான பாடல்களை, ஹைக்கூ நாடகங்களை நாம் எழுதி நடத்தலாம்.

இத்திருமணத்தின் மூலமாக 'பழமையின் ஜீவனுள்ள அம் சங்களில் அதாவது நாம் பண்பாட்டு பாரம்பரியத்தில் வாழும் அம்சங்களில் நாம் இன்றைய புதுக்கனவுகளைக் கருக் கொள்ளச் செய்து புதுமை மலர்ந்திடச் செய்ய வேண்டும் என்ற கருத்தை அழுத்தமாக பின்பற்றி செயல் படுத்தியுள்ளோம்.


தாமரையின்.... ...
காமராஜர் மாவட்ட மலருக்கு
எங்கள் அன்பு நிறைந்த
வாழ்த்துக்கள்!

டாக்டர். ஆர். தாமோதரன்
டாக்டர். டி. ரெங்கநாயகி
டி. லதா.

சாத்தூர்




படிப்பகம்

www.padippakam.com

# சாத்தூர் சேகரன்

சந்திரசேகரன் என்ற இயற் பெயர் கொண்ட சாத்தூர் சேகரன் சாத்தூரில் ஜவுளிக் கடை நடத்துபவர். இலக்கியத்திலும் மொழியியல் ஆராய்ச்சியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். 'உரிமைக்குப்பின்', என்ற நாடக நூலும், புதுமைப்பெண், கடல் என் காதலி, சேந்தமங்கலம் கோட்டை போன்ற பல நாவல்களும், ஆத்மரதம், ஞானரதம், மனத்தேர் போன்ற பல கவிதைத் தொகுதிகளும், 'ரட்சச சக்கரம்' போன்ற பல சிறுகதைத் தொகுதிகளும், சாத்தூர் சேகரனின் மொழியியல் கோட்பாடுகள், போன்ற நூல்களும் வெளியிட்டுள்ளார். உலக மொழிகள் பலவற்றில் ஆராய்ச்சி செய்து வருபவர். மலேசியா, மொரிஷியஸ் - நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டவர்.

With Best Compliments from:

ESTD. 1923

**Sri Kaliswari Fire Works**

Manufacturers of the Best 'COCK' Brand Sparklers, Crackers Rockets & Toy Fire works.

Post Box No. 133,
SIVAKASI.
Pin Code : 626 123.

Phone { FOFICE 20814, 20825, 21614
. G. PARTNER RESI : 20039 Tel: ROCKET
MANAGER RESI : 20769



படிப்பகம்

www.padippakam.com

# மடிந்தும் பிறப்பேன்

செ. ஞானன்

அரிசியில் பருப்பினில் ஆக்கிப் படைத்திட்ட
அருஞ்சோற்றைத் தொந்தியில் போட்டுப் புதைத்திட்டு
திரிந்திடும் மானுடர் கூட்டத்தில் என்னையும்
சேர்த்தாயோ ஒன்றென சொல்லிடு நண்பனே
அரசியும் வேண்டும்தான் பருப்பும் வேண்டுந்தான்
அதற்காக அதற்குள்ளே மூழ்கிடு வேனாநான்
இருக்குது வையத்தில் எனக்கென்ற வேலைகள்
யாவையும் முடிக்காது நான்மறை யேனே.

தென்றலில் பூவினில் மேலை செவ் வானத்தில்
தோன்றிடும் வண்ண வனப்பினில் மூழ்கிட்டு
தன்னையும் மறந்து குறிகெட்டு நெறிகெட்டு
தறிகெட்ட கூட்டத்தில் நான்மாட்டிக் கொள்வேனா
தென்றலும் பூவும் செவ் வானத்தில் வண்ணமும்
செய்திடும் கோலத்தில் மூழ்குதல் உண்டுதான்
என்றாலும் அதில்மூழ்கி எனக்கென்ற வேலைகள்
யாவையும் முடியாது நான்மறை வேனோ

மெல்லிய செவ்விதழ் மின்னிடும் புன்னகை
மாட்சியில் சிந்தை முழுக்க இழந்திட்டு
செல்லும் மனிதர்கள் கூட்டத்தில் என்னையும்
சேர்த்துநீ பார்ப்பது ஒவ்வாது நண்பனே
கள்ளை நிகர்த்தவும் மெல்லிய புன்னகைக்
காந்தத்தில் நானொரு இரும்புதான் என்றாலும்
சொல்லுவேன் நிச்சயம் தோளை உயர்த்திட்டு
வேலைகள் இன்னும்மேல் உண்டென உண்டென



படிப்பகம்

www.padippakam.com

இந்த உலகினில் நானெனக்குள்ளும் வேலைகள்
யாவும் இனிதாக வெற்றி கொள்ளும்வரை
சொந்தமே சொந்தம் இப் பூவுலகந்தனில்
வாழ்ந்திடும் மக்கள் எவருக்கும் சொந்தம்
என்றெண்ணி நாளினை இன்பத்தில் வாழ்கிடும்
இனிய வசந்தங்கள் எங்கும் மலர்வரை
இன்னும் பிறந்துநான் மென்மேலே வேலைகள்
ஏற்று மடிந்துபின் மீண்டும் பிறப்பேன்

---

## கலை இலக்கியப் பெருமன்றம்

## மனிதாபிமானச் சோலை

நமது தலைசிறந்த குறிக்கோள் மனிதாபிமானம். வாழ்ந்து மறைந்த மனிதாபிமானியை இனங்காட்டுவது மேலும் அப்படிப் பட்ட மனிதர்கள் தோன்ற வேண்டும் என்பதற்காகத்தான். வாழ்கிற பழம் பெரும் கலைஞர்களை மேடைக்கு அழைத்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தும் மறைந்த கலைஞர் களின் படங்களை சத்திரப்பட்டி கிளை, இவ்வூரைச் சேர்ந்த மனிதாபிமானி திரு. ராஜமயில் பெயரில் 1986ல் 'ராஜமயில் நினைவு அறக்கட்டளை' என்ற அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுவரை 16 ஆலோசகர்களையும், 111 ஆயுள் உறுப்பினர் களையும் சேர்த்து ரூ. 2",100/- பங்கு மூலதனம் உண்டாக்கி அதன் வட்டியிலிருந்து மாணவர்களுக்கு எஸ். எஸ். எல்.சி மற்றும் +2 கட்டங்களில் உதவித்தொகை கிடைக்க ஏற்பாடு செய்துள்ளது. இந்த அறக்கட்டளையின் சிறப்பு ஜாதி, மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு நிற்பதே. இந்திய நாட்டினர் யாவரும் இதன் உறுப்பினர் ஆகலாம்.

ஆயுள் உறுப்பினர். ரூ. 100/-ம் போஷகர் ரூ. 1000/-ம் செலுத்த வேண்டும். அறக்கட்டளையின் நோக்கம் மனிதாபி மானத்தை உயர்த்திக் காட்டுவதேயாகும்.

ஏ. எம். சாமி



படிப்பகம்

www.padippakam.com


# ஆனந்தாஸ் குரூப் ஆப் ஹோட்டல்ஸ்

இராஜபாளையம்

ANANDAS

5 Lines

| | |
|---|---|
| ஆனந்தா லாட்ஜ் | 22320 |
| ஆனந்தா போர்டிங் | 22909 |
| ஆனந்தா விலாஸ் (அசைவம்) | 22565 |
| ஹோட்டல் ஆனந்த் | 22787 |
| ஆனந்தா ஸ்வீட்ஸ் | 20255 |
| ஆனந்தா திருமண மண்டபம் | 20299 |




படிப்பகம்

www.padippakam.com

**மொழிபெயர்ப்பு சிறுகதை**

# மழையும் வாழ்க்கையும்

தெலுங்கு மூலம்:
ஏ. வி. வி. எஸ். எஸ். பிரசாத்

தமிழில்:
ராஜேஸ்வரி கோதண்டம்

மழை பெய்யும் போதெல்லாம் என் ஞாபகத்தில் நிற்பது ருக்கு மனியக்காதான். ருக்குவின் ஞாபகம் வரும் போதெல்லாம் கூடவே என்று சிறிய வயது சம்பங்வகளும் தொத்திக் கொள்வதுண்டு அப்போது நான் ஜில்லாபோர்டு கூலில் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். பலத்தமழை வந்து விட்டால் போதும், பள்ளிவிடு முறைதான்.

அன்று மழை வலுப்படவே ஆசிரியர் விடுமுறை என அறிவித்ததுதான் தாமதம், மழையில் தனைந்தவாறே வீட்டை அடைந்தேன்

வராண்டாவை ஒட்டிய சன்னலில், குளிருக்கு இதமாக சால்வையை போர்த்தியவாறு மழையைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ருக்கு எனது பெரியப்பா மகள். எட்டாம் வகுப்புடன் படிப்புக்கு முழுக்கு போட்டு விட்டாள். "வயது வந்த பெண் வீட்டை விட்டு வெளியே போகக் கூடாது" என்ற பெரியவரின் ஆணையால்.''

''என்ன இங்கே உக்காந்திருக்கே? என்றேன் வாசற்படியில் காலைவைத்தவாறு.

எனது வார்த்தைகள் அவளது காதில் விழுந்ததாகவே தெரியவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

காமராஜர் மாவட்ட

தாமரை மலரை

வாழ்த்துகிறோம்

தோழர் S, சங்கிலிக்காளை

நினைவுபடிப்பகம்,

சத்திரப்பட்டி

ஏய் .. உன்னைத்தான்!'' மீண்டும் பலமாகக் கத்தினேன்.

'‚என்னடா'' என்றாள் திடுக்கிட்டவளாக.

என்ன செஞ்சுண்டிருக்கே?

''மழை பெய்றதை பார்த்துண்டிருக்கேன்டா'' கண்களை விசித்திரமாக சுழற்றியவாறு பதிலுரைத்தாள்.

''அடப்பாவமே, மழையைத் தவிர நோக்கு பார்க்கறதுக்கு ஒன்றுமே கெடக்கலையோ?''

''ஒமொகரக் கட்டே, அதைப் பத்தி நோக் கென்ன தெரியும்'' என்றாள் சிரித்தவாறு.

''ஆமாமாம் ஒன்னும் தெரியாது தான். அதுக்குத்தானே பரீட்சையிலேகூட மழையைப் பற்றிய கட்டுரையை விட்டுட்டேன்.''

''எப்பப்பாரு பள்ளிக்கூடப் பேச்சுதானா,போ போயிவெளயாடு.''

''வெளியில மழை பெய்யுறதே என்றேன் சிரித்தவாறு.

''கண்டுபிடிச்சுட்டியே கெட்டிக்காரந்தா போ!''

''ஆமா இந்த கொட்டுற மழையிலே என்னதான் இருக்கு அப்படி பார்த்துட்டிருக்கே. என்னவாயிருந்தாலும் நேக்கும் காட்ட மாட்டியா!''

''ஆமா நோக்கு அது ஒண்ணுதான் கொறச்சல்' மக்குப் பிளாஸ்திரி'' என்றாலும் கோள் மூட்டி விடுவேன் தாத்தாவிடம் என்ற பயத்தில்சரி ...சரி ''இப்படி வா'' என்றாள்.

இப்போது சன்னலில் எனக்கும் இடம் கிடைத்தது. போர்வை எனக்கும் சேர்த்தே போர்த்தி விட்டாள். இருவரும் மழைச் சாரல்களையே வெகு நேரம் வரை பார்த்துக் கொண்டிருந்தோம்.

''காகிதக் கப்பலுக்கு எந்தப் புத்தகத்திலிருந்து பக்கங்களை



படிப்பகம்

www.padippakam.com

கிழிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.

''அக்காக்கா காகிதக் கப்பல் செய்வோமா!... மனதிலிருந்ததை பட்டென்று வெளியில் கொட்டினேன்.

''ஒ... மூஞ்சி'' வாயை மூடிட்டு உட்கார்ந்திட்டிரு''

''எவ்வளவு நேரந்தான் பார்த்துட்டே இருக்கிறது. அலுத்துப் போச்சி பே''

''எதுடா அலுத்துப் போச்சி? ஆகாயத்திலிருந்து பூமிக்கு செய்தி கொண்டு வருவதைப் போல இருக்கிறதல்லவா இந்த மழைச்சாரல், பொன்னிழை போன்ற மின்னல்... சிறுதூறலாக ஆரம்பித்து வர வர பெருமழையாக கனத்தில் என்ன மாற்றம்! மரங்களின் கிளைகள் - சின்னஞ்சிறிய கொழுந்துகள் இவையெல்லாம் மழையின் ஸ்பரிசத்தினால் புர்ன ஜன்மம் அடைந்ததைப்போல மெய்மறந்தும்... நடுங்கிக் கொண்டு பரவச மடைகையில் தன்னுள் விழுந்த மழைத்துளிகளால் கனவுலக சாம்ராஜ்யத்தைப் பிடித்து விட்ட பூக்கள்...

மழையின் வரவை எதிர் நோக்கி காத்திருக்கும் தூரத்து மலையின் வானவில்... புற் பூண்டுகளில்... நர்த்தனமாடி கடலலைகளோடு சங்கமித்து.... எங்கு பார்த்தாலும் பசுமை. இந்த அற்புதத்தை வருணிக்க வார்த்தைகள் தான் உண்டோ?'' இப்படியாக ஏதேதோ அடுக்கி கொண்டே போனாள் எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவ்வாறு அவள் கூறுகையில் அவள் கண்களில் ஒருவித பளபளப்பு,

''தேஜஸ் விநோத ஈர்ப்பு படபடப்பு, கண்களின் சிரிப்பு.

''ஆமாம் அவள் மழையை ஆராதனை செய்கிறாள் தாமரை மலர் அவள். ஆராதிக்க எத்தனை ஜன்மம் தவமிருக்க


## தாமரை மேலும் வளர வாழ்த்துக்கள்

மு. மணவாளன்
S/O தோழர். மு. முனியாண்டி
கணேஷ் காபிபார்

!A., நியூ ரோடு,
சிவகாசி-626123.




படிப்பகம்

www.padippakam.com

வேண்டும் கொடுத்து வைத்தா லல்லவோ?'' என்று இப்போது நினைக்கிறேன்

''அப்போது அவள் பேச்சு சுத்த அறுவை''

மழையை பார்த்து விட்டால் போதும் அவள்மனம் ஆனந்தப் பரவச அலைமோதும். கட்டுக் கடங்காத எண்ணப் பிரவாகங் கள்.

சிலநாட்களில் நான் ஹைஸ் கூல் படிப்பிற்காக பட்டணம் சென்றுவிட்டேன். அப்போது தான் அவளது திருமணம்.முழுப் பரீட்சை என்பதால் கிராமத் திற்குச் செல்ல இயலவில்லை.

நீண்டநாட்கள் கழித்து இப் போதுதான் இங்கு வருகிறேன் பஸ்ஸை விட்டிறங்கி பொடி நடையாக வீட்டை அடை கிறேன். தாத்தா இறந்த பிறகு வீடே வெறிச்சோடி கிடக்கிறது. ஐப்பசி மாத மாகையால் மழை யின் பிசுபிசுப்பு. அந்த சன்ன லைப் பார்த்ததும் ருக்மிணி அக் காவின ஞாபகம் ... இப்போது இந்த மழையில் ருக்கு முன்னை மாதிரியே மழையை ரசித்துக் கொண்டிருப்பாளோ?

ஊரின் இந்தப் பக்கம் தாத்தா வீடு, அந்தப் பக்கம் ருக்குவின் புகுந்த வீடு. அத்தான் ஸ்கூல் டீச்சர்.

வீடு இருக்கும் இடம் சரியாக

தாமரை

காமராஜர்

மாவட்ட மலருக்கு

வாழ்த்துக்கள்

*

E. P. மணியராஜா

இராஜபாளையம்

நினைவில்லை ஆதலால் மாமா விடம் கேட்டு புறப்பட்டேன்.

''மழை பெயுதே விட்டப்புறம் போயேன்'' மாமாவின்வார்த்தை களை காதில் போட்டுக்கொள் ளாமலே குடையை எடுத்துக் கொண்டு புறப்படுகிறேன்.

மழை பெய்யும் போது ருக்கு என்ன செய்கிறாளோ?

அவளது ரசனை உள்ளந் தான என்னையும் மழையைப் பார்த்ததும் குதூகலிக்கும் ரசனை உள்ளவனாக தூண்டி விட்டது-

மெதுவாக அடிமேலடிவைத்து



படிப்பகம்

www.padippakam.com

## தாமரைக்கு வாழ்த்துக்கள்

★

ஒரு அன்பர்
**சிவகாசி**

அவளது வீட்டில் நுழைகிறேன் தூறல் பலத்து பெரிய மழையாக ஆரம்பிக்கிறது.

ருக்கு சன்னலில் அமர்ந்தவாறு சால்வையைபோர்த்திக் கொண்டு எப்போதும் போல மழையைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

''என்னக்கா சௌக்கியமா''

''ஆமாண்டா எப்பவந்தே ? என்னுடன் பேசியவாரே மறுபடியும் மழையைப் பார்த்த வாறு அமர்ந்து விட்டாள்.

ஆகா' அக்கா அப்படியே இருக்கிறாள்......

நான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் ஆம் இல்லை ஊம் என்ற சொற்கள் மட்டுமே அவளிடமிருந்து வெளிவந்தன மழையோடு லயித்துப்போனாள் போலும்.......

''என்னக்கா மழையென்றால் அப்போதைப் போலவே இப்போதும் இருக்கிறாயே .. என்ன இருந்தாலும் என் அக்கா ரசிக சிகாமணிதான்'' அவள் மெல்லத்திரும்பினாள்.

''என்னமோ ....... போடா சங்கர் இந்த மழைத்தூறலைப் போலவே அன்றாடம் சிலவுகள் அதிகரிக்கும் மழையைப் போல கடனும் பெருகி வருகிறது. அத்தானின் வருமானம் போதவில்லை.

கல்யாணத்திற்கு பெரியவள் கல்லூரியில் படிக்கும் அடுத்தவள் சின்னவளை அடுத்த வருடம் மேல்படிப்பிற்கு அனுப்ப வேண்டும். எனக்கு ட்யூசன்கள் முன் போல வருவதில்லை. நடு நடுவே இந்த இடிகளைப்போல ஊர்மாற்றங்கள் வேறு ...மழையால் ஏற்படும் சகதி போலத் தாண்டா என் வாழ்க்கை ஆகி விட்டது..............!'

எனக்கென்றால் ஒரே ஆச்சரியும்.

'அக்கா ருக்குதானா இவள். மழையென்றால் அவள் ரசிகத்துவம் எங்கே ....? குதூகலம் எங்கே?

இந்த வேறுபாடு ஏன்...?

இவள் எண்ணங்களிலும் கற்பனைகளிலும் ஏன் இந்த வரட்சி! வாழ்க்கை......!

ஆனால் அன்றும் ..இன்றும் மழை ஒன்றுதான். ●



படிப்பகம்

www.padippakam.com

## படைப்பாளர்கள் நிறைந்த ராஜபாளையம்

சிவ, அருணாசங்கர, த. மீ. செல்வம், இலதா, வெ கந்த குமார், கோ. இளங்கோ, ரோ. வெங்கட்ராமன், ரோ. முருகேசன் வந்தியத் தேவன், பால்ராஜ், மைந்தன் தர்பார், காசி சுப்பிர மணியன், ரஜினி பெத்துராஜா, பறம்பு நடராஜன், டாக்டர் கணேசன், நீலம் மதுமயன், ராம்ஜி, சுப்ரா பூமிநாதன், மு. சிவம் பிரதீபன், ஜி. மாரிமுத்து, உதயபரிதி, ராஜேஸ்வரி, கோதண்டம் வேங் கேசன வெங்கட்ராமன், குன்றக்குடி பெரியபெருமாள், முத்தரசு, கார்முகிலன், செல்வ நாயகம், சி. கோ. ஆறுமுகம், கோமதி நாயகம், த. இராமகிருஷ்ணன், த. முருகேசன், இரா. கதைப்பித்தன், ராகவி, பதினெட்டாம் படியான், பொன்னுச் சாமி, ச. மாதவன்.

இவர்களில் பலர் பல நூல்கள் வெளியிட்டவர்கள்.

கொ. மா. கோதண்டம்

---

With best compliments from:

**Door & Shutter Locks**

**The Most Strong & Reliable Locks.**

SRK DOOR LOCK
MADE IN INDIA
150x100MM
SPECIAL 6 LEVER LOCK SPRAY



**28B, T.P. Mills Road,**

**RAJAPALAYAM-626 117.**

**Tamil Nadu.**

Prop: S.R. BALASUBRAMANIAM

Phone No. Office : 22164
Recidence: 21311



படிப்பகம்

www.padippakam.com

## காமராஜர் பாடிய பாரதியின் பாட்டு

ரஷ்ய பயணத்தின் போது, லெனின்கிராட் நகர மேயர் அளித்த விருந்திலும் கலந்து கொண்டார் விருத்தில் பேசிய தலைவர் காமராஜ் ரஷ்ய புரட்சியையும், ரஷ்யத்தலைவர் லெனினையும் வெகுவாகப் புகழ்ந்து பேசியதோடு, ரஷ்யப் புரட்சியைப் பற்றி அமரகவி பாரதியார் பாடிய,

“ஆகாவென் றெழுந்தது பார் யுகப்புரட்சி.”

என்ற பாடலையும் பாடிப் போரின் கொடுமையிலிருந்து உலகத்தை விடுப்பதற்காகப் பாடுபடும் சமாதானக் காவலனான ரஷ்யாவோடு இந்தியா தோளோடு தோள் சேர்ந்து ஒத்துழைக்குமென்று உறுதி கூறினார்.

(முருக தனுஷ்கோடி - காமராஜ் ஒரு சரித்திரம் பக்கம் 245)

பு. சி. கணேசன்

---

With Best Compliments from:

Grams : “CORONATION

Phones : 22254, 22255
22256, 22257
Telex : 0448-203 CLW IN

**The Coronation Litho Works**

Post Box No. 2,
SIVAKASI-626 123.

Quality Offset Printers and Manufacturers of Calendars, Labels, Posters, Folders, Cartons, Diaries, Booklets, Marriage Invitations, MICR Security Documents and Everything in Printing. We undertake Photo-Typesetting and Carton Pasting on Job Work Basis.

*BRANCHES*

Gemeni Parsn Apartment,
Block ‘B’, Ist Floor,
Flat No. 8, 599, Anna Salai,
MADRAS-600 006.

Phones : 474047 & 471432
Grams : “CORONLITH”
Telex; 041-25120 CIMB IN

G-130, Chittaranjan park,
NEW DELHI - 110 019.

Phone : 6467702

---



படிப்பகம்

www.padippakam.com

# மாமனிதர் பங்காரு



ராஜபாளையம் தோழர். கே. எஸ். பங்காருராஜா 1930ல் நடந்த வேதாரண்ய உப்புப் போரில் ராஜாஜி தலைமையில் கலந்து போலீசாரால் பயங்கர மாக அடிக்கப்பட்டு ஒரு வருடம் சிறைதண்டனை பெற்றார்.

1932ல் கள்ளுக்கடை மறியலில் ஆறுமாத தண்டனை.

1943ல் பொதுவுடமை இயக்கத்தில் சேர்தல்.

அரிஜனங்களுக்கு சேவை செய்ததால் 'பள்ளபங்காரு' என பட்டப் பெயர் பெற்றவர். இவரது சகோதரியான மஞ்சம்மாள் கோசா முறையை உதறிவிட்டு கொடியேந்திப் போராடி சிறை சென்றவர். 2)-6-90ல் அமரரானார்.

---

With Best Compliments from:

OFF 20599
Phone : 21775
Fac. 20995
Resi 20531

Sri. Sankareswary Process

Specialist in Fine Art Offset printing Scanning
processing offset Negatives & Colour Transparancy.

24A, Visvanatham Road,
SIVAKASI-626123.

---



படிப்பகம்

www.padippakam.com

# பகல் கனவுகள்

பாகீரதி கிருஷ்ணமூர்த்தி

மாலைச் சங்கு ஊதுகிறது. அந்தப் பஞ்சு மில்லின் வேலை முடிந்த நேரம். பெண்கள் வந்த வண்ணம் இருந்தனர்.

சாரதா இருமிக் கொண்டே வந்தாள்.

''ஏண்டி சாரதா இடைவிடாம இப்படி இருமறியே டாக்டர் கிட்ட காட்ட வேண்டியது தானே?''

அவளும் கெத்து விடாமல் ''ம் காட்டணும்னுதான் நெனச்சுட்டிருக்கேன். வேலை தொடர்ந்து இருக்கே.''

ஹீம். வீட்ல வசதியில்லே வெளியில சொல்றதுல கௌரவக் குறைவு!

இதுல கெத்து வேற கெத்து ஹீம். மனசுக்குள் முனகிக் கொண்டாள் அவள்.

காது செவிடாகும்படி பவர் லூமின் இறைச்சலிலிருந்து வெளியே வந்து ஸ்ரீதர் சுதந்திரக் காற்றின் சுகத்தை அனுபவித்தான். தன் வயது சிறுவர்களுடன்,

அப்பா காணோமே?

''சரி நாம போகலாம். அம்மா வந்திருப்பாங்க.''

அவன் எதிரில் பள்ளிக் கூடத்திலிருந்து வெளிப்பட்ட சிறுவர்கள். தன்னுடன் வெளி வந்த சிறுவர்கள் பள்ளிச் சிறுவர்களுடன் சேர்ந்து கடைகளில் விற்கும் பண்டங்களை வாங்கித் தின்றனர்.

''டேய் கால் ரூபாயிக்காவது ஏதாவது வாங்கித்தின்னுடா.'' மறுத்து விட்டான் ஸ்ரீதர். அந்தக் கால் ரூபாயிக்கு ஒரு ஊறுகாப் பொட்டலம் வாங்கினா ஒரு நேரத்துக் தொட்டுக்க போதுமே என கணக்குப் போட்டது அவன் மனம்.

ஒரே சீராக புத்தகப் பைகளை சுமந்து சென்ற சிறுவர்களைப் பார்த்து பெருமூச்சு விட்டான் ஸ்ரீதர்.

அப்பா அந்த ரெண்டு வேஷ்டிய மாத்தி மாத்தி துவைச்சு கட்டறார், வேல செய்யறப்போ மட்டும் ஒரு பழைய டவுசர்.



எழுத்தாளர்
கொ. ச. பலராமன்



படிப்பகம்

www.padippakam.com


## வாழ்த்துக்கள்

●

அன்னை அபிராமி

சிவகாசி


எனக்கு மட்டும் என்ன நல்லதா ரெண்டு செட் வாங்க முடியுதா. நான் வேலைக்குப் போனதிலேர்ந்து கொஞ்சம் வசதியா சாப்பிடறோம்.

அதோ நம்ம வீட்டுக்கு வாத்தியார் வாராரே எதுக்கு ஓடினான்.

வாங்க சார். எங்க வீட்டுக்கு ...வந்திருக் கீங்க... உட்காருங்க பரபரத்தான்.

அம்மா பாத்தியா யாருவந்திருக்காங்கன்னு...

லொக்...லொக்... என்ன ஓ... வாத்தியாரய்யாவா. ''வாங்கய்யா.'' ''வணக்கமம்மா,''

''வணக்கமய்யா. ஏது இந்த ஏழை வீட்டுக்கு.''

''அம்மாஸ்ரீதர் ரொம்பகெட்டிக்கார பையன் அவனது படிப்ப நிறுத்தினது எனக்கு ரொம்ப வருத்தம்''

''ஆமாங் கய்யா. சின்னப் பையன் வேலக்கு போக முடியாதுன்னுட்டு செலவில்லாம படிச்சான் படிக்கட்டுமேன்னு விட்டோம். இனிபடிக்க வைக்க வசதியில்ல. அவனும் வேல கத்துக்கணும். எங்களப் போலவங்க பெரிய படிப்பு படிக்க முடியாது. படிச்சாலும் ஆயிரக் கணக்குல பணம் கட்டி வேல வாங்க திராணியில்லங்கய்யா.

''அப்படிச் சொல்லாதீங்கம்மா அவன் படிச்சா என்னால ஆற உதவியை செய்யறேன். நம்ம ஸ்கூல்ல மணியடிக்க தோட்ட வேலையைப் பார்த்துக்க ஆள் தேவைப் படுது. இதுக்கு பெரியவங்களைப் போட்டுச்கலாம். ஆனா நம்ம ஸ்ரீதரை வேலைக்குப் போட்டா வேலையையும் பார்த்துப்பான் அதே நேரம் பாடம் நடத்துறதையும் கவனிச்சு அதுலயே படிச்சுருவான். பரீட்சை எழுதறது இதெல்லாம் நான் பார்த்துக்கறேன். அவனால முடியும். திறமையான பையன்.''

ஸ்ரீதரின் மனம் மகிழ்ச்சியினால் துள்ளியது.

''அப்படிங்களா ஐயா. அவங்கப்பா வந்துறட்டும். கேட்டுச் சொல்றேன். அதோ அவரே வந்துட்டாரே''.

''வாங்கய்யா...வாங்கய்யா... ஏதேது இம்புட்டுதூரம் வந்திருக்கீங்க. ஆசிரியர்ஸ்ரீதரைப் படிக்க வைக்கும் யோசனையைக் கூறினார்.

ஸ்ரீதர் படபடக்கும் நெஞ்சுடன் அவன் அப்பாவைப் பார்த்தான்.

''நீங்களே வந்து இவ்வளவு தூரம் சொல்லி ஆசைப்படறீங்க அனுப்பி வைக்கிறேன் ஐயா.''

இரவு ஸ்ரீதரனுக்கு கலர்



படிப்பகம்

www.padippakam.com

கலராய் கனவுகள்... படித்துப் பட்டம் பெற்று வேலைக்குப் போவது வரை.

காலையில் எழுந்து பர பர வென்று வேலையை முடித்து இரண்டு செட் துணிகளில் நல்லதாக ஒன்றை எடுத்துப் போட்டுக் கொண்டு பள்ளிக்கு ஆவலாய் கிளம்பினான்.

அவனது படிப்பார்வத்தைப் பார்த்த பெற்றோருக்கு கண்கள் கலங்கியது.

பள்ளியில் வேலை செய்த நேரம் போக மீதி நேரத்தில் உட்கார்ந்து பாடங்களைக் கேட்டான். மற்ற மாணவர்களை விட இவன் கூர்மையாக கேட்டு ஆசிரியர் கேட்கும் கேள்விகளுக்கு உடனுக்குடன் பதிலளித்தான்.

அன்று ஆசிரியர்கள் நடத்திய பாடங்கள் பற்றி, தான் கேள்விக்கு உடனே பதிலளித்தது பற்றி அம்மா அப்பாவுடன் பகிர்ந்து கொள்ள விரைவில் வீடு வந்தான்.

''என்ன இது நம்ம வீட்டு முன்னாடி இவ்வளவு கூட்டம்.''

''ஐயா காலைல எவ்வளவு சந்தோஷமா மகனை அனுப்பி வச்சீங்க இப்படி ஒண்ணும் பேசாம இருக்கீங்களே''

தாயின் அலறல். உள்ளே பாய்ந்தான்.

அப்பா கருகிய உடலுடன் உட்கார வைக்கப் பட்டிருந்தார்.

புரண்டு புரண்டு அழுதான்! அடுத்து என்ன செய்யப் போகிறான்?

என்ன செய்யப் போகிறான. அவனுக்கு வேலை கிடைக்க பஞ்சமா என்ன, பாதிச் சம்பளத்தில்..


With best Compliments from

## Sri Renganatha Match Industries

Manufacturers of



USE ROSE CARD BOARD MATCHES

Phone : 2252 & 2253 Grams : PROSPER

*SRI RAMIAH BUILDINGS*

48, Main Road KOVILPATTI-627 701.


படிப்பகம்

www.padippakam.com

# யார் புத்திசாலி?

தவறே செய்யாதவரல்ல புத்திசாலி. அப்படி யாரும் இருக்கவும் முடியாது. யாருடைய தவறுகள் கடுமையான தவறுகளாய் இல்லையோ யார் அவற்றைச் சுலபமாகவும் சீக்கிரமாகவும் சரி செய்துகொள்ள முடிகிறதோ அவரே புத்திசாலி.

—லெனின்

---


With best Compliments from:

T. N. G. S. T. Rc. No. 904845 Phone: 20185

C. S. T. No. 491863 dt. 1-12-80 Grams: THE ARUNA

**The Aruna Papercaps Industries,**

Manufacturers of: "YALI BRAND" DOT & ROLL CAPS.

Bankers:
State Bank of India, Sivakasi.

**17, Sattur Road, SIVAKASI-626 123.**


---


161, பிரகாசம் சாலை, சென்னை-108. ஜனசக்தி அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் எஸ். எஸ். தியாகராஜன்,
ஆசிரியர்: ப. மாணிக்கம்


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

Regd. No. 9140 THAMARAI September 1990
W.P.P.No.TN/MS(N)54 Regd. as News Paper in Srilanka

# ஜனசக்தி

(வார இதழ்)

| | | |
|---|---|---|
| 1 வருட சந்தா விலை | ரூ. | 104-00 |
| 6 மாத சந்தா விலை | ரூ. | 52-00 |
| 3 மாத சந்தா விலை | ரூ. | 26-00 |
| தனிப் பிரதி விலை | ரூ. | 2-00 |

●

# தாமரை

(கலை இலக்கிய மாத இதழ்)

| | | |
|---|---|---|
| ஆண்டு சந்தா விலை | ரூ. | 24-00 |
| 6 மாத சந்தா | ரூ. | 12-00 |
| தனிப் பிரதி விலை | ரூ. | 2-00 |

படிப்பகம்